# உதயன்

விலை ரூபா 6-00

மலர் 14 வள்ளுவர் ஆண்டு 2030 சித்திரை 07 செவ்வாய்க்கிழமை (20-04-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 122


# 2 எம். பிக்கள் பதவி ஏற்பதை தடுக்க நீதிமன்றம் மறுப்பு!

## டக்ளஸின் மனுவை விசாரிக்க இணக்கம்

கொழும்பு, ஏப்ரல் 20

யாழ். மாவட்ட சுயேச்சைக்குழுவின் சார்பில் புதிய எம். பிக்களாக மொஹமட் சுல்தான் ரஹீம், சுப்பையா ஜெகநாதன் ஆகியோர் நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்தும்—

அவர்கள் எம். பிக்களாகப் பதவியேற்பதற்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு விதிக்கக் கோரியும்—

சுயேச்சைக் குழுவின் தலைவரும் ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா சமர்ப்பித்த மனுவை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது. ஆனால் இரு எம்.பிக்களும் பதவியேற்பதற்கு இடைக்காலத் தடை விதிக்க நீதிமன்றம் மறுத்து விட்டது.

சுயேச்சைக் குழுவிலிருந்து வெளியேற்றப்பட்டதால் பதவியிழந்த ஆர். இராமேஸ்வரன், ஆர். இராமமூர்த்தி ஆகியோரின் இடத்துக்கு வேட்பாளர் பட்டியலில் விருப்பத் தெரிவு வாக்குகளின் அடிப்படையில் அடுத்து இருந்த இருவரின் பெயர்களை எம். பிக்களாகத் தேர்தல் ஆணையாளர் அறிவித்தார்.

அந்த இருவரும் வேட்பாளர் பட்டியலில் எஞ்சியுள்ள ஒருவரான நடராஜா சிவ

(9 ஆம் பக்கம் பார்க்க)

## சடலங்கள் தபால் பொதி செல்ல அனுமதி

வவுனியா, ஏப்ரல் 20

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு உயிலங்குளம் 9ஆம் கட்டைப் பாதையூடாக இறந்தவர்களின் உடல்களையும் தபால் பொதிகளையும் எடுத்துச் செல்ல

(10ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனையில் கடை தீக்கிரை

மட்டக்களப்பு, ஏப்ரல் 20

வாழைச்சேனைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு கடை ஒன்று இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. அருகில் இருந்த மற்றொரு கடையில் இருந்து பொருள்கள் சூறையாடப்பட்டன.

சூறையாடப்பட்ட பொருள்களின் ஒருபகுதி கைவிடப்பட்ட வீடு ஒன்றில் இருந்து மீட்கப்பட்டதாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-21)

## தயிர்ச் சட்டிக்குள் சக்திவாய்ந்த குண்டு!

### அம்பாறை பொலீஸார் மீட்பு

அம்பாறை, ஏப்ரல் 20

கல்முனையில் இருந்து அக்கரைப்பற்று நோக்கிச் சென்ற பஸ்ஸில் தயிர்ச் சட்டி ஒன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சக்திவாய்ந்த நேரம் கணித்து வெடிக்கும் குண்டு ஒன்றை பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர்.

காரைதீவு அதிரடிப்படை சோதனை நிலையத்தில் நேற்றுக் காலை 11: 15 மணிக்கு இந்தக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் செயலிழக்கச்செய்யப்பட்டது.

(10 ஆம்பக்கம் பார்க்க)

### செம்மணி புதைகுழி தோண்டுதல்

## பூர்வாங்க விசாரணைகளுக்காக புலனாய்வு பொலீஸ் குழு வருகை

### உறவினர் சாட்சியமளிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 20

செம்மணிப்பகுதியில் இருப்பதாகச் சந்தேகிக்கப்படும் பெரும் மனிதப் புதைகுழியைத் தோண்டுவதற்கான முன் நடவடிக்கையாகப் பூர்வாங்க விசாரணைகளை மேற்கொள்ள 15 பேர் கொண்ட குற்றப் புலனாய்வுப் பொலீஸ் பிரிவின் விசேட அணி ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

செம்மணிப் புதைகுழியை எதிர்வரும் ஜூன் மாதம் 16 ஆம் திகதி தோண்டுவதற்கு யாழ். நீதிமன்றம் முடிவு செய்திருப்பது தெரிந்ததே.

பூர்வாங்க விசாரணைகளை நடத்த இங்கு வந்துள்ள குழுவினர் காணாமற்போனோரின் அடையாளங்கள் தொடர்பாக உறவினர்களிடம் சாட்சியங்களைப் பதிவு செய்ய உள்ளனர்.

புதைகுழி தோண்டும்போது வெளிவரும் எச்சங்களை இனங்கண்டு உரியவர்களை இனங்காண வசதியாகவே இந்த விவரங்கள் சேகரிக்கப்பட உள்ளன.

காணாமற்போனோர் பற்றிய தகவல்கள், அவர்களின் அங்க அடையாளங்கள், கடைசியாக அணிந்திருந்த உடைகள், ஆபரணங்கள், மணிக்கூடு போன்ற விவரங்களை உறவினர்களிடமிருந்து பெற்றுப் பதிவு செய்யும் பணியை மேற்படி குழுவினர் இன்று ஆரம்பிக்கவுள்ளனர்.

இன்று முதல் தொடர்ந்து 10 நாள்களுக்கு தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை இப்பணி மேற்கொள்ளப்படும் என்றும் —

சாட்சியமளிக்க விரும்புவோர் யாழ். பொலீஸ் நிலையத்துக்குச் சமுகமளிக்குமாறும் —

யாழ். பொலீஸார் கேட்டுள்ளனர்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

### ஏறாவூரில் நேற்று

## மர்மப் பொருள் வெடித்து சிறுமி படுகாயம்!

மட்டக்களப்பு ஏறாவூரில் நேற்றுப்பிற்பகல் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் 4 வயதுச் சிறுமி ஒருத்தி படுகாயமடைந்தார்.

வீட்டு முற்றத்தில் காணப்பட்ட மர்மப் பொருள் ஒன்றை எடுத்து விளையாடியபோது அது திடீரென வெடித்துச் சிதறியதால் இச்சிறுமி காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சிறுமி ஆபத்தான கட்டத்தில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-6-21)

### ஸ்ரேடிய புதைகுழி விவகாரம்

## சட்ட வைத்திய அதிகாரி அறிக்கை சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் உள்ள மனிதப் புதைகுழியில் இருந்து மனித எலும்புக் கூடுகள் எடுக்கப்பட்டமை தொடர்பான சாட்சிய அறிக்கையை யாழ். சட்ட வைத்திய அதிகாரி எஸ். வி. ஸ்ரீ இராஜேஸ்வரன் நேற்று யாழ். நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

கடந்த 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம், 16ஆம் திகதிகளில் இடம்பெற்ற அகழ்வுப் பணிகளின் போது புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட சுமார் 5 மனித உடல்களுக்குரிய எலும்புகள், எச்சங்கள் என்பன சட்ட வைத்திய அதிகாரியினால் பொதிசெய்யப்பட்டு கொழும்பில் ஆய்வு செய்ய அனுப்புவதற்காக வைக்கப்பட்டுள்ளன.

எலும்புகள் மீட்கப்பட்டது தொடர்பான சாட்சிய அறிக்கையையே யாழ். சட்டவைத்திய அதிகாரி நேற்று யாழ். மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் சமர்ப்பித்தார்.

சாட்சிய அறிக்கையைப் பதிவு செய்வது தொடர்ந்து இன்றும் நடைபெறவுள்ளது.

(ஐ-5-6)

## சுதந்திரக்கட்சி கூட்டம் இன்று

கொழும்பு, ஏப்ரல் 20

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் விசேட கூட்டம் இன்று கொழும்பில் நடைபெறும் என்று பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி. எம். ஜெயரத்ன தெரிவித்தார்.

இதேவேளை —

நாளை மறுதினம் வியாழக்கிழமை பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் விசேட கூட்டம் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்படி இரு கூட்டங்

(9 ஆம் பக்கம் பார்க்க)

### வாகன அணி செல்லும்

## உயிலங்குளம் பகுதியில் புலிகள் மீது தாக்குதல்

வவுனியா, ஏப்ரல் 20

உயிலங்குளம் முன்னணிக் காவலரண் பகுதியில் ஞாயிறு நள்ளிரவு விசேட அதிரடிப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் 5 விடுதலைப் புலிகள் உயிரிழந்துள்ளதாகவும்—

அவர்களின் சடலங்களையும் ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளதாகவும்—

பாதுகாப்புத் தலைமையகம் அறிவித்துள்ளது.

நேற்று அந்த இடத்துக்கு விஜயம் செய்த மன்னார் மாவட்ட நீதிவான் சடலங்களைப் பார்வையிட்டதுடன் அவற்றைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு மன்னார் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையின் பொருட்டு சடலங்கள் மன்னார் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன.

ஐந்து சடலங்களும் சீருடை தரித்த நிலையில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சமீபமாக — 9 ஆம் கட்டைப் பகுதியில் — கடந்த வெள்ளியன்று விடுதலைப் புலிகளும் தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தமை

(10ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு நகரில்

## வங்கி ஜெனரேட்டர் குண்டு வைத்து தகர்ப்பு

மட்டக்களப்பு நகரில்— பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ள—மக்கள் வங்கி கிளை அலுவலகத்தின் ஜெனரேட்டர் நேற்று முன்தினம் இரவு குண்டு வைத்துத்தகர்க்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு அரசடியில் உள்ள மக்கள் வங்கிக் கிளையில் இருந்த ஜெனரேட்டரே தகர்க்கப்பட்டுள்ளது.

ஜெனரேட்டரில் பொருத்தப்பட்ட நேரங் குறித்து வெடிக்கும் குண்டு மூலமே அது தகர்க்கப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தக் குண்டு வெடிப்பால் வங்கிக் கட்டடத்தின் கண்ணாடிகள் சேதமடைந்ததுடன் கூரையும் சிறிது சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-6-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா ஆறுமுகம்

(LONDON B A)

காரைநகர், நாவலடிக்கேணியைப் பிறப்பிடமாகவும் அதே இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை செல்லையா ஆறுமுகம் (London B A) இளைப்பாறிய ஆசிரியர், உரும்பிராய் இந்துக்கல்லூரி) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐ. செல்லையா திருமதி செ. முத்தாச்சியின் அன்பு மகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும் ஆறுமுகம் வீரகத்தியின் அன்பு மருமகனும் நாகம்மா, தெய்வானை ஆகியோரின் அன்புச் சகோதரரும் யோகாம்பிகை, யோகநாதன் (இளைப்பாறிய தபால் அத்தியட்சகர்), பாலசுப்பிரமணியம் (நீர்ப்பாசனத் திணைக்களம் யாழ்ப்பாணம்), அம்பிகை (பல் வைத்திய அதிகாரி), தவமணி (நீர்ப்பாசனத் திணைக்கள எழுத்தாளர்), நல்லநாதன் (பொறியியல் விரிவுரையாளர் - கொங்கொங்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வே. சண்முகநாதன் (காலஞ்சென்ற உதவி அரசாங்க அதிபர்), நீற்றா (இளைப்பாறிய ஆசிரியர்), ஞானாம்பிகை, வைகுந்தவாசன் (உதவி வைத்திய அதிகாரி), தவராசா (நீர்ப்பாசனத்திணைக்களம்), திருமகள் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (19-04-99) திங்கட்கிழமை பி. ப. 3-00 மணியளவில் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**ஆ பாலசுப்பிரமணியம்**
(மகன்)

சக்களாவோடை,
காரைநகர்.
(65006)

## வைத்திலிங்கம் முருகேசு

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 37/1, சிவகுருநாதர் லேன், பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் முருகேசு நேற்று (19-04-99) திங்கட்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் சரோஜினிதேவி (கனடா), காலஞ்சென்ற கமலாசனி, Dr குமாரசாமி (கனடா), இராஜலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற Dr கந்தையா, கிருஷ்ணபிள்ளை (கிருஷ்ணபவான்), இராமநாதன் (அபிராமி விலாஸ்), குணமலர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், சிவகாமிப்பிள்ளை, தையல்நாயகி, செல்லம்மா, வேலுப்பிள்ளை, நவரத்தினம், தம்பிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் விசாகரத்தினம் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற நாகரத்தினம் ஆகியோரின் சிறிய தந்தையும் காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை, கந்தப்பிள்ளை, கந்தையா (ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-4-99) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க. இராமநாதன்**
(மருமகன்)

37/1, சிவகுருநாதன் லேன்,
பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்
(64990)

## திருமதி கார்த்திகேசு சின்னம்மா

விடத்தல்பளையைப் பிறப்பிடமாகவும் மட்டுவிலில் வசித்தவருமாகிய கார்த்திகேசு சின்னமமா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் (இளைப்பாறிய பாதுகாப்பு உத்தியோகத்தர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும், மகேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை), நடராசா (சாரதி இ. போ. ச பருத்தித்துறை), இரத்தினம் (பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், கொழும்பு), தில்லைநாயகி, கணேசபிள்ளை (தட்டெழுத்தாளர், கட்டட நிர்மாணத் திணைக்களம், யாழ்ப்பாணம்), பரமேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், வேலுப்பிள்ளை (விடத்தல்பளை), சிவபாக்கியம் (மீசாலை) ஆகியோரின் சிறிய தாயாரும், காலஞ்சென்ற அம்பிகைப்பிள்ளையின் (விடத்தல்பளை) பெரிய தாயாரும், மனோகரன் (இளைப்பாறிய இ. போ. ச. சாரதி, கோண்டாவில்), சரோசாதேவி, செல்லம்மா (ஆசிரியை, வவுனியா மகா வித்தியாலயம்), காலஞ்சென்ற கந்தையா, பரமேஸ்வரி (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா), திருவருட்சோதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், மனோகாந்தன், மைதிலி, மகிந்தன், காண்டீபன், காயத்திரி, உதிஸ்திரன், முகுந்தன், பகீரதன், வைதேகி, கௌதமி, சஞ்ஜீவ் ஆகியோரின் பாசமிகு பாட்டியும், காரீசன், சுபங்கவி, சாயிசங்கீத், ராம் ஜனகை ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (20-04-1999) 12 00 மணியளவில் சரசாலையில் நடைபெற்று, வேம்பிராய் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்

தகவல்:
**கா. நடராசா**
(மகன்)

"திருக்குற்றாலம்"
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
(64989)

## ஒத்திவைப்பு

யாழ் நகர் மைய றோட்டரக்ற் கழகத்தினால் நேற்று திங்கட்கிழமை முதல் நாளை புதன்கிழமை வரை நடத்தப் படவிருந்த பட்டிமன்றச் சுற்றுப் போட்டிகள் மே மாதம் 3 ஆம் திகதி நடத்தப் படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [க—ரி]

## திருத்தம்

கடந்த ஞாயிறு உதயனில் 11 ஆம் பக்கத்தில் வெளியான விசயரத்தினம் இராசையா என்பவரது மரண அறிவித்தல் விளம்பரத்தில் —

மைத்துனர் பத்மநாதன் என்பதை பரமநாதன் எனத் திருத்தி வாசிக்குக. (ஆ-ர்)


**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்று
ரஜனி - சௌந்தர்யா
நடித்த
**படையப்பா**
காட்சிகள்:
9-00. 12-00, 3-00
FAX No. 070-212223
FOREIGN T.P. No.
0094 -70 -212223
(64970)

**நாகம்ஸ்**
சுன்னாகம்.
இன்று
பிரபுதேவா - கயோல்
அரவிந்தசாமி நாஸர்
நடித்த
**மின்சாரக் கனவு**
காட்சிகள்: 11-00, 2-30
(புதியநேரம்)
(64933)

**ராஜா**
யாழ்ப்பாணம்.
சூரியா - முரளி - ஜீவிதா
ரசிகா - மணிவண்ணன்
விவேக் - ராதிகா - நாஸர்
மற்றும் பலர் நடித்த
**காதலே நிம்மதி**
இன்று காட்சிகள்
10-30, 2-00
(சி/7100)

**ராஜா 'B' திரை**
யாழ்ப்பாணம்
ரஜனி - சிவாஜி
சௌந்தர்யா
மற்றும் பலர் நடித்த
**படையப்பா**
காட்சிகள்:
10-30, 2-00
(சி/7237)

யாழ். **றீகல்**
வெண் திரையில்
ரஜனி - சௌந்தர்யா
நடித்த
**படையப்பா**
(CD வெளியீடு)
காட்சிகள்:
10-30, 2-30
25 அடி அகலத் திரையில்
காணத் தவறாதீர்கள்!
★ எமது திரையரங்கில் 16 - 04 - 99 அன்று தவற [illegible] துவிச்சக்கர வண்டியை உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.
(65010)


# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் நடராசா

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நடராசா (இளைப்பாறிய லிகிதர், காணிப் பதிவகம், யாழ்ப்பாணம்) 18-4-99 அன்று காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவநாயகியின் அன்புக் கணவரும் தங்கராணி, சிவபாலன் [நீர்ப்பாசன திணைக்களம் வவுனியா], கமலராணி, சிவானந்தி, பொன்னம்பலம் ஆகியோரின் அன்புத் தந்தையும் சோதி வடிவேற்பிள்ளை [காப்புறுதி அமைப்பாளர், காப்புறுதிக் கூட்டுத்தாபனம்], நேசமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் வனஜா, செந்தில்குமாரன், வாசுகி, ஜனகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18-4-99 அன்று மல்லாகம் மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:
**சு. சோதி**
(மருமகன்)

'நவவாசா'
7ஆம் கட்டை, மல்லாகம்.
[65008]

## சதாசிவம் இராசையா

சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த சதாசிவம் இராசையா 18-04-99 ஞாயிற்றுக்கிழமையன்று சிங்கப்பூரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மீனாட்சியின் அன்புக் கணவரும் பார்வதிதேவி (சிங்கப்பூர்), சாந்தவடிவேல் (சுவிஸ்), சசிதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகேஸ்வரன் (சிங்கப்பூர்), தயா (சுவிஸ்), சிவா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிங்கப்பூரில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
**திருமதி புஸ்பவதி வாமதேவன்**
(மருமகள்)

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
(64999)

## வைரமுத்து தெட்சணாமூர்த்தி

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகக்கொண்டவரும் தற்பொழுது கொழும்பு கொட்டாஞ்சேனையில் வசித்தவருமான வைரமுத்து விசாலாட்சி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் தெட்சணாமூர்த்தி அவர்கள் 19 - 4 - 99 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சிவராணியின் அன்புக் கணவரும் சண்முகநாதன் [கொழும்பு, துறைமுக பிரதம லிகிதர்], சொக்கலிங்கம் [இந்தியா], காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி, சண்முகமூர்த்தி [பிரான்ஸ்], திருமதி சந்திரசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவரோகினி [பிரான்ஸ்], கிருபாமூர்த்தி [சுவிஸ்], சிவராகினி, சுவேந்திரமூர்த்தி [பிரான்ஸ்], சிவறஞ்சி [பேராதனைபல்கலைக்கழகம்] ஆகியோரின் அன்புத் தந்தையும் ஹரிகரன் [பிரான்ஸ்], குணசிங்கம் [கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்சன், ஜயனா, சுகிர்தன், யகாசினி ஆகியோரின் அன்புப் பேரனும் துரைராசா, காலஞ்சென்ற பஞ்சலிங்கம், தேவராணி, சிவமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [20-04-99] செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2·00 மணியளவில் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சு. துரைராசா**
[மைத்துனர்]

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
(65012)

## சுப்பிரமணியம் பொன்னுத்துரை

(பிரபல வவுனியா வர்த்தகர்)

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் பட்டநாதர் கோயில் வீதியை வசிப்பிடமாகவும் தற்போது இல. 20, பாலிநகர் வவுனிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பொன்னுத்துரை 18—04—99 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பையா சீதேவிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் ஞானசக்தியின் அன்புக் கணவரும், விமலநாதன், தேவிகா, கமலநாதன், கிருபாதேவி, கலாதேவி, ஜெகநாதன், கேதீஸ்நாதன், கௌசாலதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜியின் அன்பு மாமனரும் சோமசேகரம் (தாரணி அச்சகம், ஜமுனா வீதி, நல்லூர்), கந்தசாமி (வவுனியா வர்த்தகர்), சரஸ்வதி ஆகியோரின் அன்புச்சகோதரரும் இராஜேஸ்வரி, தவமணி, பாலசிங்கம், தங்கராசா (வவுனியா வர்த்தகர்), சொக்கலிங்கம் (வவுனியா வர்த்தகர்), காலஞ்சென்ற செல்லத்துரை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் மல்லாவியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சரஸ்வதி**
(தங்கை)

நல்லலெட்சுமி அவெனியூ,
நல்லூர்.
(65005)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்று அரசு அமைக்கும் காங்கிரஸ் முயற்சியில் முன்னேற்றம் இல்லை

## ஆதரவுவழங்க இடதுசாரிகள் பின்னடிப்பு

புதுடில்லி, ஏப்ரல் 20

பாரதீய ஜனதா கூட்டணி அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வி அடைந்ததை அடுத்து புதிய அரசு ஒன்றை அமைக்க காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தலைமையில் முன் எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் இன்னமும் வெற்றி அளிக்கவில்லை.

காங்கிரஸ்தலைமையிலான அரசுக்கு ஆதரவு வழங்க இடதுசாரிகள் மறுத்து வருவதே இதற்குக் காரணம் எனக் கூறப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசுக்கு எதிராக வாக்களித்த சில இடதுசாரிக் கட்சிகள் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு வழங்கப் பின்னடிப்பதாகக் கூறப்பட்டது.

தமது நிலைப்பாட்டை இடதுசாரிகள் இன்று வெளியிடுவர் என தெரிவிக்கப்பட்டது.

காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி உருவாகும் பட்சத்தில் அங்கம்பெறும் கட்சிகளின் விருப்புக் கடிதங்களை ஜனாதிபதி பெறவேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சி கோரியுள்ளது.

நிலையான ஆட்சி அமைய வேண்டும். இல்லையேல் தேர்தல் நடத்த வேண்டும் என கட்சிகள் பலவும் கோரியுள்ளன.

அதே நேரம் — கூட்டணி அமைக்க இணக்க நிலை ஏற்பட்டுள்ளது என்றும்— இன்று மாலைஅது தொடர்பான விவரம் வெளியாகும் என்றும் — அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்று அறிவித்துள்ளார்.

கூட்டணி அமைக்கும் இணக்கநிலை இன்னமும் ஏற்படவில்லை என்று காங்கிரஸ் பிரமுகர் சரத்பவார் தெரிவித்தார்.

காங்கிரஸ் கூட்டணி அமைக்க இணக்க நிலை ஏற்படாத பட்சத்தில் ஆட்சி அமைக்கும்படி பாரதீய ஜனதாக் கட்சி அழைக்கப்படலாம் என்று அரசியல் விமர்சகர்கள் கூறினர்.

எப்படியாவது அந்த நிலையைத் தடுத்து நிறுத்துவேன் என்று ஜெயலலிதா சபதம் எடுத்துள்ளார். [இ-3]

**உலக அரங்கில்**

## லண்டனில் குண்டு வெடிப்பு; 48 பேர் காயம்

லண்டன், ஏப்ரல் 20

லண்டன் சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் குண்டு ஒன்று வெடித்ததில் 48 பேர் காயம் அடைந்தனர்.

இந்தக் குண்டு வெடிப்புக்கு எவரும் உரிமை கோராத போதும் ஐரிஷ் கெரில்லாக்களின் செயலாக இது இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. (இ-3)

## கொசோவோவில் மனிதப் புதைகுழிகள்

பெல்கிரேட், ஏப்ரல் 20

கொசோவோவில் 43 மனிதப் புதைகுழிகள் உள்ளன என்று நேட்டோ நாடுகள் தகவல் வெளியிட்டுள்ளன.

அவை தொடர்பான படங்கள் தம்வசம் உள்ளன என்றும் நேட்டோ தெரிவித்துள்ளது.

இந்த மனித புதைகுழிகள் தோண்டப்படும் பட்சத்தில் ஆயிரக்கணக்கில் சடலங்கள் கண்டுபிடிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொசோவோவுக்குள் நுழைந்துள்ள சேர்பியப் படையினரால் கைதுசெய்யப்பட்ட அல்பேனிய இனத்தவர்கள் பெரும் அளவில் கொலை செய்யப்பட்டிருப்பதாக நேட்டோ தெரிவித்துள்ளது.

இவர்கள் புதைக்கப்பட்ட புதைகுழிகள் பற்றிய விவரங்களே தற்பொழுது வெளிவந்துள்ளன. (இ-3)

## ஹர்த்தாலை அடுத்து பங்களாதேஷில் கலவரம்

### 50 பேருக்கு மேல் காயம்

டாக்கா, ஏப்ரல் 20

பொலீஸாரின் அடாவடித்தனம், அத்தியாவசியப் பொருள் விலையேற்றம் ஆகியவற்றைக் கண்டிக்கும் வகையில் பங்களாதேஷ் எதிர்க்கட்சிகள் மேற்கொண்ட ஹர்த்தால் மோதலாக வெடித்தது.

நான்கு கோரிக்கைகளை முன்வைத்து பங்களாதேஷ் எதிர்க்கட்சியான தேசியக் கட்சி இந்த ஹர்த்தாலுக்கு நேற்று முன்தினம் அழைப்பு விடுத்திருந்தது.

இதன் காரணமாக செயற்பாடுகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்த அதே நேரம் தலைநகர் டாக்கா மற்றும் துறைமுக நகரான சிட்டகொங் ஆகிய இடங்களில் மோதல்கள் இடம்பெற்றன.

நாட்டு வெடிகள் மற்றும் கற்களைக் கொண்டு பொதுமக்கள் பொலீஸார் மீது தாக்குதல்களை நடத்தினர்.

பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி கலவரங்களைத் தடுத்தனர்.

இந்தக்கலவரங்களில் 50-க்கு மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். (இ-3)

## 26 ஆவது நாளாக நேற்றும் யூகோ. மீது விமானத் தாக்குதல்

பெல்கிரேட், ஏப்ரல் 20

யூகோஸ்லாவியா மீது தாக்குதல்களை தீவிரமாக்கியுள்ள நேட்டோ நாடுகள் அந்த நாட்டுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. நேற்று 26 ஆவது நாளாக நேட்டோவின் தாக்குதல் இடம் பெற்றது.

பெல்கிரேட் மற்றும் நொவிசாட் ஆகிய நகர்கள் மீது விமானத்தாக்குதலை நேட்டோ படைகள் கடந்த சில தினங்களாகத் தீவிரமாக்கியுள்ளன.

இதன்காரணமாக பெரும் சேதம் யூகோஸ்லாவியாவுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக நேட்டோ நாடுகள் அறிவித்துள்ளன.

அதே நேரம் — அந்த நாட்டுக்கு எதிராகப் பொருளாதாரத் தடையை ஏற்படுத்தி நெருக்கடி நிலையை உருவாக்க நேட்டோ நாடுகள் முடிவு செய்துள்ளன.

எண்ணெய் விநியோகத்தைத் தடைசெய்வது தொடர்பாக ஆராயப்படுகின்றது என்றும் —

முதற் கட்டச் செயற்பாடாக இது அமையும் என்றும்— அமெரிக்கா கூறியுள்ளது.

இதற்கிடையில் — அணு ஆயுத ஏவுகணைகளை நேட்டோ நாடுகள் மீது குறிவைக்கப்போவதாக ரஷ்யா அறிவித்துள்ளதாக வெளிவந்துள்ள தகவல்களை அடுத்து பிரிட்டன் தனது 2 ஆவது நீர்மூழ்கிக்கப்பலை அங்கு அனுப்ப முடிவு செய்துள்ளது என்றுசெய்தி ஏஜென்ஸிகள் குறிப்பிட்டன. (இ - 3)

## அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதல்!

பாக்தாத், ஏப்ரல் 20

தென் ஈராக்கில் விமானங்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள வான் பிரதேசத்தில் ரோந்துவந்த அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளது.

குவைத், சவூதி அரேபியா நிலைகளில் இருந்து புறப்பட்ட அமெரிக்காவின் எவ் 14, எவ் 16 ரக விமானங்கள் தென் ஈராக்கில் ரோந்து மேற்கொண்டதாகவும் —

அந்த விமானங்களை நோக்கி ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்— ஈராக் கூறியுள்ளது.

இந்தத் தாக்குதல்களால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான தகவல் வெளியாகவில்லை.

இத்தகைய செயல்களில் அமெரிக்கா, பிரிட்டன் தொடர்ந்து ஈடுபட்டால் பதில் தாக்குதல் நடத்தப்படும் என்று ஈராக் எச்சரித்துள்ளது. (இ-3)

## தென் லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா நிலைகள் மீது ஏவுகணைத் தாக்குதல்

பேரூட் ஏப்ரல் 20

தென் லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா நிலைகள் மீது இஸ்ரேல் விமானங்கள் ஏவுகணைத் தாக்குதலைநடத்தியுள்ளன.

ஹிஸ்புல்லா கிளர்ச்சியாளர்கள் தென் லெபனானில் இஸ்ரேல் வசம் உள்ள பகுதிகள் மீது நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றன என்றும் —

இந்தத் தாக்குதல்கள் தொடரும் எனவும் — இஸ்ரேல் அறிவித்துள்ளது.

அதேநேரம் — இஸ்ரேல் இந்த வாரம் கொண்டாடவுள்ள 51 ஆவது சுதந்திர தினத்தை ஒட்டி எல்லைப் புறப்பாதைகள் பாதுகாப்புக்காக நேற்று முதல் மூடப்பட்டுள்ளன. (இ-3)

## தலிபான் - எதிரணி படையினர் மோதல்

ஆப்கானின் வடக்குப் பிரதேசமான பாரியாத் மாகாணத்தில் தலிபான் படைகளுக்கும் எதிர்தரப்புப் படைகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம் பெற்றுள்ளன.

காபூல் நகரில் இருந்து 150 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இந்த மாகாணம் தலிபான் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது.

எதிர்த்தரப்புப் படைகளுடன் இடம்பெற்ற சண்டையில் தலிபான் அந்த மாகாணக் கட்டுப்பாட்டை இழந்ததுடன் அங்கிருந்து படைகளையும் வாபஸ் பெற்றுள்ளது.

## ரயில்வேத் திணைக்களம் தனியார் மயமாக்கப்படும்

### முதலில் சரக்கு ரயில் சேவை கைமாறும்

கொழும்பு, ஏப்ரல் 20

இலங்கை ரயில்வே திணைக்களம் தனியார் மயமாக்கப்படவிருக்கின்றது.

இது தொடர்பான அறிக்கையை அமைச்சர் பௌசி அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார்.

இந்த தனியார் மயமாக்கல் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக சரக்கு ரயில் சேவைகளை புத்தளம் சிமெந்து நிறுவனம் பெறுப்பேற்கவிருக்கின்றது.

ரயில்வே திணைக்களத்தின் தண்டவாளங்களில் இந்தச் சேவைகள் நடக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காலக்கிரமத்தில் அந்த நிறுவனம் தனியாக தண்டவாளங்களை அமைக்க இது தொடர்பான இணக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பு

நெல்லியடி, ஏப்ரல் 20

தென் புலோலி ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய பரிபாலன சபையினரால் ஆலய பிரதம சிவாச்சாரியார் துன்னாலை அ. பிறேமச்சந்திரக் குருக்கள் பொன்னாடை போர்த்தி பொற்கிளி வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் து. மார்க்கண்டு தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். (க-109)

## தீவுப்பகுதியைச் சேர்ந்த 60 விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள்

தீவுப்பகுதியில் அறுபது விவசாயிகளுக்கு கெயர் நிறுவனத்தினால் விவசாய உள்ளீடுகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

அல்லைப்பிட்டி, அனலைதீவு, வேலணை, சுருவில் ஆகிய கிராமங்களிலிருந்து இந்த விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் இந்தக் கிராமங்களுக்கு விஜயம் செய்த கெயர் நிறுவன அதிகாரிகள் இங்குள்ள விவசாயிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தினார்கள்.

இதேவேளை அனலைதீவுப் பகுதியில் கெயர் நிறுவனத்தினால் குளம் ஒன்றும் திருத்தியமைக்கப்பட உள்ளது. (இ-5)

## மனனப் போட்டி

வலிகாமம் கல்வி வலய மட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே திருக்குறள் மனனப்போட்டி சமீபத்தில் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடத்தப்பட்டது. (இ-135)

## காய்ச்சல் பரவுகிறது

குடாநாட்டில் காய்ச்சல் வேகமாகப்பரவி வருகிறது. யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் நூற்றுக்கு மேற்பட்டோர் தினமும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-139)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

152, சேர் பொன்: இராமநாதன் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணிக்கம் விஜயரட்ணம் என்பவரது தேசிய அடையாள அட்டை [இல. 442432112V] யாழ்ப்பாணம் கன்னாதிட்டி வங்கி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிமெந்துக் கூட்டுத்தாபனம் தற்காலிகக் காரியாலயம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். [64968]

தெல்லிப்பழை சித்தியம் புளியடியைச் சேர்ந்த ஐயம்பிள்ளை ஈஸ்வரி என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 0907022737), தேசிய அடையாள அட்டை அனுப்பிய சிட்டை என்பன யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தடியில் தொலைந்துவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும். [64973]

## ஆங்கிலக்கல்வி

சுலபமான முறையில் எழுத வாசிக்க கதைக்க ஆங்கிலத்தில் சித்திபெற ஆசிரியர்: ந விக்கினேஸ்வரன் ஆச்சாரி 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பணம் சங்கானை தபால் நிலையம் அருகில் சங்கானை. [64972]

# மீனகள இறககின்றன

தென்மராட்சி. ஏப்ரல் 20

நாவற்குழிப் பாலத்தின் கீழ் மீனகள இறந்து மிதக்கின்றன.

அதிக அளவு வெப்பமே மீன்கள் இறக்கக் காரணம் என்று நம்பப்படுகிறது. (இ-117)

# கொடுப்பனவு

வடடுக்கோட்டை, ஏபரல் 20

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பகுதியில் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைக்க மேலும் 346 குடும்பங்களுக்கு முதற்கட்ட கொடுப்பனவு ரூ. 5 ஆயிரம் வழங்கப்பட்டுளளது. (இ-12)

# கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்கள அலுவலரும் தற்போது திருகோணமலை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கடமையாற்றிவரும்

திருமதி வி. யோகேஸ்வரியின்
[கூட்டுறவுப் பரிசோதகர்]
அன்புக் கணவருமாகிய

## திரு. தர்மலிங்கம் விவேகானந்தன்

[கூட்டுறவுப் பரிசோதகர், திருகோணமலை]

அவர்களின் திடீர் மறைவினை அறிந்து துயருறும் நாங்கள் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்,
நலன்புரி கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள்
யாழ்ப்பாணம்.

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்,

(64988)

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 — 01 — 1944



உதிர்வு 30 — 04 — 1998

செல்வி

## சந்திராதேவி நடராஜா

(கோப்பாய் நாவலர் வித்தியாலய உப - அதிபர்)

நீங்கள் உடலால் பிரிந்தாலும் - உங்கள்
நினைவுகள் எங்கள்
இதயத்தில் என்றும் அலை ஓடுகின்றன
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்
சகோதரர்கள்,
பெறாமக்கள், மைத்துனர் கள்.
உற்றார், உறவினர்கள்.

அம்மன் கோவிலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(64976)

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

## சின்னத்தம்பி இராஜரட்ணம்

மலர்வு 22–03–1938
உதிர்வு 20–04–1996



செல்வி

## கௌசலாதேவி இராஜரட்ணம்

மலர்வு 18–04–1975
உதிர்வு 20–04–1996

அன்புமிக்க தெய்வங்களே பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் ஒளிவிளக்காய் பிரகாசித்த நீங்கள்
எம்மைவிட்டுப் பிரிந்து மூவாண்டு மறைந்ததே.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

[64982]

# மீளக்குடியமர முடியாத நிலைமை

வலி கிழக்கு ஏப்ரல் 20

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஒரு பகுதி வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லையுடன் இணைந்த பிரதேசமாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருப்பதால் அப் பகுதியில் இடம் பெயர்ந்துள்ள மக்கள் மீளக் குடியமர முடியாமல் உள்ளனர்.

இவர்களை தமது சொந்த இடங்களிலேயே மீளக்குடியமர்த்த வேண்டுமென வலி கிழக்கு பிரதேச சபை தீர்மானித்துள்ளதாகவும் —

சம்பந்தப்பட்ட சகல தரப்பினரோடும் தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும்— வலி. கிழக்கு பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-180)

# சின்ன மௌலானாவின் மறைவுக்கு அனுதாபம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

"நாதஸ்வர மேதை சின்ன மௌலானாவின் மறைவு இசை உலகுக்கு பேரிழப்பாகும். இசைஉலகில் தனக்கென ஓர் முத்திரை பதித்த அன்னாரின் மறைவு குறித்து இலங்கை இசைவேளாளர் சமூகம் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றது.

இவ்வாறு தமிழக நாதஸ்வர மேதை ஷேக்சின்ன மௌலானா மறைவு குறித்து இலங்கை இசைவேளாளர் சங்கம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்படடுள்ளது.

மேற்படி சங்கத்தலைவர் எஸ் ஆர். ஞானசுந்தரம் வெளியிட்டுள்ள அஞ்சலிச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது —

கடந்த பல ஆண்டுகளாக தனது நாதஸ்வர இன்னிசையால் உலகம் முழுவதிலுமுள்ள எண்ணற்ற ரசிகர்களை மகிழ்வித்ததுடன் நாதஸ்வர தவில் கலைஞர்களுக்கு ஓர் வழிகாட்டியாகவும் விளங்கிய அன்னாரின் மறைவு கலை உலகில் பெரியதோர் வெற்றிடத்தை ஏற்படுத்தி விட்டது.

தனது வாரிசுகளாக பல கலைஞர்களை உருவாக்கி விட்டுச் சென்றுள்ள அன்னாரின் நினைவு பாரம்பரியக் கலைகளான நாதஸ்வர, தவில் கலைகள் இந்த உலகில் இருக்கும்வரை நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. — என்றுள்ளது.

இலங்கை இசைவேளாளர் சங்கம் சார்பில் அன்னாரின் குடும்பத்துக்கு அனுதாபச் செய்தி ஒன்றும் அனுப்பி வைக்கப்படடுள்ளது. (இ)

# VACANCY

Wanted for Green Memorial Hospital, Manipay a resident M. B. B S Doctor or Registered Medical Practitioner.

Salary: Negotiable.
Apply to: Medical Superintendent
before 6th May 1999.

(64974) MEDICAL SUPERINTENDENT

# வாழ்த்துகின்றோம்

இலங்கை கல்வி நிர்வாகசேவை தரம் - III இல் தெரிவு செய்யப்பட்டு யாழ். கல்வி வலயம் I இல் பணிபுரியும் நீர்வேலி பாலர் பகல் விடுதியின் செயலாளரும், நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் ஐக்கிய நாணய சங்கத்தின் உபதலைவருமான யா/அத்தியார் இந்துக்கல்லூரி ஆசிரியை

திருமதி

## ஞானாம்பாள் தெய்வேந்திரராசா

அவர்களுக்கு எமது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொளகின்றோம். அவரது சீரிய பணிமூலம் மேலும் உயர்பதவிகள் பெறவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஸ்ரீ முருகன்
மாதர் ஐக்கிய நாணய சங்கம்
பாலர் பகல் விடுதி
நீர்வேலி

(64986)

வீட்டில் தங்கி உதவி புரிய நடுத்தரவயதுப் பெண் ஒருவர்

# உடனடியாகத் தேவை

சம்பளம், இருப்பிடவசதி சகலதும் உத்தரவாதம். பேசித் தீர்க்கலாம். நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். 21, 22 ஆம் திகதிகளில் தொடர்பு வைக்கவும்.

திருமதி சாந்தி ஆனந்தன்
C/O MRS. T. MAHADEVAN
"Thanga Mahal"
Post Office Road,
Chavakachcheri.
(செருக்கல் பிள்ளையார் கோவில் எதிரே இருக்கும் ஒழுங்கை)

(64980)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வன்னிப் பகுதியில்

# ஆளணிப் பற்றாக்குறையால் நிர்வாகப் பணிகள் பாதிப்பு

வவுனியா, ஏப்ரல் 20

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியில் ஆளணிப் பற்றாக் குறை நிலவுவதால் நிர்வாகப் பணிகள் பெருமளவு பாதிக் கப்பட்டுள்ளன என்று அங்கு பணிபுரியும் உயர்மட்ட அரச தலைவர்கள் முறைப் பாடு செய்துள்ளனர்.

போதியளவு ஆசிரியர்கள், ஊழியர்கள் பாடசாலைகளில் இல்லை என்றும் —

வைத்தியசாலைகளில் சகல தர ஊழியர்களுக்கும் பற் றாக்குறை நிலவுகின்றது என்றும் — அவர்கள் தெரி வித்தனர்.

ஆளணித் தட்டுப்பாடு கார ணமாக நிர்வாகப் பணிகள் பெருமளவில் பாதிக்கப்பட் டுள்ளன என்றும் —

ஆளணியினரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண் டும் என்றும் — அவர்கள் அரசிடம் கோரியுள்ளனர்.

(இ-3)

## சமுர்த்தி முகாமையாளர்களில் இதுவரை 15 பேர் பதவிதுறப்பு

வடமராட்சியில் நியமிக்கப் பட்ட சமுர்த்தி முகாமையா ளர்களில் இதுவரை 15 பேர் தமது பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ள னர் என்று தெரிவிக்கப்படு கிறது.

1997 இறுதிப் பகுதியில் வடமராட்சி இராணுவத் தளபதியினால் 25 சமுர்த்தி முகாமையாளர்கள் நியமிக் கப்பட்டனர்.

அவர்கள் பணி ஒதுக்கப் படாத நிலையில் கடமை யாற்றி வந்தனர்.

அவர்களில் 15 பேரே தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளனர்.

இராஜினாமாச் செய்தவர் கள் அண்மையில் வழங்கப் பட்ட ஆசிரியர் நியமனங் களில் உள்வாங்கப்பட்டுள்ள னர் என்று தெரிவிக்கப்படு கிறது.

(இ-185)

## சங்கக்கிளை திறந்து வைப்பு

வலி. கிழக்கு, ஏப்ரல் 20

இராணுவ நடவடிக்கை யினால் சேதமுற்றிருந்த பண் டத்தரிப்பு பலநோக்கு கூட் டுறவு சங்கத்தின் மாதகல் பற்றுக்கிளை (13) புனரமைக் கப்பட்டு திறந்து வைக்கப் பட்டுள்ளது.

யாழ் அரசஅதிபர் க. சண் முகநாதன் இதனைத் திறந்து வைத்தார்.

சங்கத் தலைவர் எஸ். செல் வரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேசசெய லர் நா. வேதநாயகன், யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் கு. சண்முக நாதன் கிளைக்குழு உறுப்பி னர்கள் செ. சண்முகசுந்தரம் எஸ். சிவலிங்கம் ஆகியோர் உட்பட பலர் உரை நிகழ்த் தினர்.

[இ-180]

## மோசமான வீதி

வலி. வடக்கு, ஏப்ரல் 20

மல்லாகம் முதல் குப்பிளான் வரையான வீதி மிகவும் மோச மான நிலையில் காணப்படு கின்றன.

ஒரு வருடத்துக்கு மேலாக இந்த வீதியைத் திருத்த கற் கள பறிக்கப்பட்ட போதிலும் இன்னும் வேலைகள் எதுவும் நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றன.

வீதியில் பறிக்கப்பட்ட கற் கள் பரந்து கிடப்பதினால் பாதசாரிகள் கூட போக்கு வரத்துச் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

(இ-86)

## வீதியைத் திருத்த நடவடிக்கை

வலி. தென்மேற்கு ஏப். 20

நீண்ட கால இடைவெளி யின் பின்னர் நவாலி-பிப்பிலி வீதியைத் திருத்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

கடந்த 12 வருடங்களுக்கு மேலாக முறையாக திருத்தப் படாத இந்த வீதி போக்கு வரத்துக்கு உதவாத நிலை யில் குண்டும் – குழியுமாக உள்ளது.

இந்த வீதியை திருத்த தற் போது கற்கள் பறிக்கப்பட்டு வருகிறதாகவும் –

விரைவில் திருத்த நடவ டிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-185)

## கோஷ்டி மோதலில் நால்வர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

கொக்குவில் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்ப வம் ஒன்றில் நால்வர் காய மடைந்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த தங்கராசா ஜெகதீஸ்வரன் [வயது 31] தங்கராசா சர்வேஸ்வரன் [வயது 25] சின்னத்துரை பாலபாஸ்கரன் [வயது 44] பா. பூங்கோதை (வயது 37) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

(இ - 173 15 139)

## நாய்களால் தொல்லை

தென்மராட்சி, ஏப்ரல் 20

சாவகச்சேரி ஆஸ்பத்திரி யில் கட்டாக்காலி நாய்களி னால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கு கின்றனர்.

(இ-117)

## தையல் பயிற்சி

இளவாலை, ஏப்ரல் 20

இளவாலை, கன்னியர்மட மகா வித்தியாலத்யதில் முறை சாராக் கல்விப் பிரிவின் கீழ் தையல் பயிற்சி நெறி ஆரம் பிக்கப்படவுள்ளது.

(இ)

# மனிதநேயம் மிக்க சமுதாயம் ஒன்றை கட்டிஎழுப்ப நாம் உழைக்க வேண்டும்

### ஒன்றுகூடல் வைபவத்தில் மேலதிக நீதிவான்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

எதிர்கால சமுதாயத்தை மனித நேயம் மிக்க ஒரு சமு தாயமாகக் கட்டியெழுப்பு வதற்கு நாங்கள் எல்லோரும் அயராது உழைக்க வேண் டும்.

மேற்கண்டவாறு யாழ் நீதிமன்ற மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் தெரி வித்தார்.

யாழ்ப்பாணம், ஊர்காவற் றுறை, வேலணை நீதிமன் றங்களின் ஊழியர் நலன் புரிச் சங்கம் நடத்திய புத் தாண்டு ஒன்றுகூடல் நிகழ் வில் கலந்து கொண்டு ஆசி யுரை வழங்குகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ். நீதிமன்றக் கட்டடத் தில் இடம்பெற்ற இந்த நிகழ் வில் அவர் மேலும் கூறிய தாவது:-

எமது பாரம்பரிய பண் பாட்டுப் பழக்க வழக்கங்கள் யாவும்இன்று அழிந்துபோகும் நிலையிலுள்ளன. சிறுபரா யத்தினர் முன்னர்புத்தாண்டு தினத்தில் ஆலயத்துக்கு சென்று பின்னர் உற்றார், உறவினரிடம் சென்று ஆசீர் வாதம் பெறுவர். ஆனால் இன்று இந்த நிலை மாறி விட்டது. இவ்வாறு எத் தனையோ பழக்க வழகக்ங் கள் இன்று இல்லாமல் போய் விட்டன.

இன்றைய சமுதாயத்தின ராகிய நாம் வருகின்ற சமு தாயத்துக்கு மனித நேய உணர்வுகளைக் கொடுக்க வேண்டும். மனித நேயப் பண்புகளைச் சிறிய வயதிலி ருந்தே பிள்ளைகளுக்கு ஊட் டிவர வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

ஓய்வு பெற்ற மல்லாகம் வாபட்ட நீதிமன்ற நீதிபதி மு. திருநாவுக்கரசு இந்த வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது கூறிய தாவது—

நீதிமன்றம் என்பது தெய் வீகம் நிறைந்த புனிதமான இடமாகும். நீதி மன்றத்தில் கடமையாற்றுபவர்கள் தெய் வத்தினுடைய சாயலைக் கொண்டவர்கள்.

இறைவனுக்கு இன்னொரு பெயர் நீதி என்பது எம்மில் பலருக்குத் தெரியாதிருக் கலாம். எனவே இத்தகைய புனிதத்துக்கும்; சிறப்புக்கு முரிய நீதிமன்றத்தில் கட மையாற்றுபவர்கள் நீதி வழு வாது செயற்பட வேண்டும். அப்பொழுது தான் சரியான நீதி மக்களுக்குக் கிடைக்கும்.

எளிமை, தூய்மை, இறை உணர்வு உடைய [illegible] உயர்ந்து கொண்டே போவார்.

யாழ். மாவட்டத்தில் இருக் கின்ற நான்கு நீதிமன்றங் களையும் சேர்ந்த ஊழியர் களும் ஒன்று சேர்ந்து நீதி மன்ற ஊழியர் நலன்புரிச் சங்க ஒன்றியம் அமைத்து அதன் மூலம் ஐக்கியமாக செயற்பட வேண்டும்.

இப்படி அவர் கூறினர்.

சாவகச்சேரி நீதிமன்ற நீதி பதி எஸ். பிரேம்சங்கர், பருத் தித்துறை நீதிமன்ற நீதிபதி இ. த. விக்னராஜா, ஒய்வு பெற்ற மேல் நீதிமன்ற பதி வாளர் வி. எஸ். கணேசன், மூத்த சட்டத்தரணி க. கனக ரத்தினம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

நீதிமன்ற ஊழியர்களின் குழந்தைகளின் கலை நிகழ் வுகளும், வினோத உடைப் போட்டியும் நடைபெற்றன.

யாழ். மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன், திருமதி எஸ். திருநாவுக்கரசு, திருமதி ஏகநாதன் ஆகியோர் இன்னிசைப்பாடல்களைப் பாடினார்கள்.

விழா நிகழ்வுகளை செல்வி எஸ். வானதி, எஸ். அன் பழகன் ஆகியோர் தொகுத்து வழங்கினார்கள்.

(இ-5)

# சீடா நிறுவன உதவித் திட்டத்தின் கீழ் 200 நீர் இறைக்கும் இயந்திரங்கள்

வலி. கிழக்கு, ஏப்ரல் 20

யாழ். மாவட்ட விவசாயி களுக்கு சீடா நிறுவன உத வித் திட்டத்தின் கீழ் 200 நீர் இறைக்கும் இயந்திரங்களை கடன் அடிப்படையில் வழங்க கமநல சேவைத் திணைக்க ளம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்கென கொழும்பில் இருந்து 200 நீர் இறைக்கும் இயந்திரங்கள் கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதனைப் பெறவிரும்பும் விவசாயிகள் அந்தந்தப்பகுதி பதிவு செய்த விவசாய சம் மேளனம் ஊடாக தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படு கின்றனர்

இவைகள் அப்பகுதி விவ சாய சம்மேளனம் ஊடாக சிபார்சின் அடிப்படையில், கடன் திட்டத்தின் கீழ் விவ சாயிகளுக்கு வழங்கப்பட வுள்ளதாக கமநல சேவைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-180)

## இன்னும் நியமனம் இல்லை

வலி, தென்மேற்கு ஏப். 20

சமுர்த்தி முகாமையாளர் களை நியமிக்க பட்டியல் வெற்று ஒருவருடம் முடிந்த நிலையிலும் இதுவரை நிய மனம் கிடைக்கவில்லையென வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கவலை தெரிவித்துள் ளது.

[இ-185]

## வாசகர் திருமுகம்

### மனிதம் செயற்படுகின்றது

கடந்த 14-03-99 ஆம் திகதி ஞாயிறு அன்று பிற்பகல் 2 மணியளவில் திருகோணமலையிலிருந்து எனது குடும்பத்தினர், கடல் மார்க்கமாக காங்கேசன் துறை வந்துசேர்ந்தனர். அங்கிருந்து பேருந்து மூலம் யாழ்நகர் வந்தனர். அவ்வேளை கையில் கொண்டு வந்த பொதிகளில் ஒன்று தவறிவிட்டது சில தினங் களின் பின் யாழ். பேருந்து நிலைய காரியாலயத்தில் விசாரித்தபோது எமக்குச் சாதகமான பதில் கிடைத் தது. மேலும் சிலதினங்களின் பின் அதிர்ஷ்டவசமாக தவறியபொதி கிடைத்திருப்பதாக காரியாலயம் மூலம் தகவல் கிடைத்தது. அதனுள் அடங்கிய 2,500 ரூபா மற்றும் பெறுமதியான பொள்கள் ஒன்றும் தவறாமல் கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சியுறறோம்.

அன்றைய தினம் பேருந்தில் கடமையாற்றிய சாரதி, காப்பாளர் மற்றும் காரியாலய நிர்வாகத் தினர் அனைவருக்குகும் நாம் மிகுந்த நன்றி கூறுகின் றோம். இப்படியான மனிதநேய அடிப்படையில் பணி யாற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் மீண்டும் நன்றியைக் கூறுகின்றோம். ஏனைய சகல மக்களுக்கும் இது ஒரு முன்னுதாரணமாக அமையும் என்று நம்பு கிறோம்.

ஞா. அருளானந்தம்

மத்தியூஸ் வீதி. யாழ்ப்பாணம்

### நேர மாற்றம் வேண்டும்

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி அளிக் கப்படுவதால் ஆசிரியர்களின் கற்பித்தலை வளம்படுத்த லாம். அதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடும் சிறப்பாக அமையும். இது எல்லோருக்கும் தெரிந்த, எல்லோரும் எதிர்பார்க்கும் ஒன்று.

ஆனால் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்கள் பல கஷ்டங்களை பிரதேச, குடும்ப ரீதியில் எதிர்நோக்க வேண்டியுள்ளது இந்தப பயிற்சி நெறியில் குடும்பத் தலைவர், தலைவி, குடும்பத்துக்குப் பொறுப்பான இளம் பெண்கள், ஆண்கள் போன்றோர் அடங்குவர். அவர்கள் அன்றாடம் வீடு சென்று தான் அப்பயிற்சி நெறியினைத் தொடரவேண்டிய கடப்பாடுள்ளது. தூர இடங்களில் இருந்து கலாசாலைக்கு வருபவர்கள் தான் மிக அதிகம்.

எத்தனை தடை முகாம்களில் [சோதனைச்சாவடி] இறங்கி ஏறிச்சென்று வரவேண்டும் காலைப்பொழுது கலாசாலை ஆரம்பிக்கும் நேரத்திற்குச் சென்று விட லாம். ஆனால் வீடு போய்ச் சேர்வது தான் மாலை நேரம். அதில் தான் பல சிக்கல்கள் உள்ளன. இரண்டு பஸ்களில் பயணம் செய்யும் நிலையும் எம்மில் பலருக்கு உண்டு. இந்த வகையில் பி. ப 4.30 மணிக்கு கலா சாலை முடிவடைவதாலும் அதன் பின் உடற்பயிற்சி 5 30 மணிக்கு [2 நாள்கள்] முடிவடைவதாலும் பஸ் சினைத் தவறவிடுவது உண்மை நிகழ்வு.

தங்குவதற்கு அயலில் அறை எடுத்து நின்றால் குடும்பங்கள் பல பட்டினி கிடக்க நேரிடும் என்பது ஒரு புறம், மாதாந்த வேதனம் போதாமை மறுபுறம். எமது பிரதேசத்தில் நிலைமை முழுவதும் சீருக்கு வர வில்லை. தலைகள் பல வெட்டப்படுகின்றன சுற்றி வளைப்புக்களும் தொடர்கின்றன. இந்த நிலையிலும் பயங்கரமான சூழலில் நாம் எம்மை வளர்க்க வேண் டும். நல்ல ஒரு சூழ்நிலை என்றால் இரவும் பயமின்றி பயணம் செய்யலாம்.

எனவே எங்களுக்குள் ஒரு புரிந்துணர்வு இருக்க வேண்டும்.

எனவேதான் உடற்பயிற்சி உள்ளடங்க 30 நிமிடங் கள் முன்னதாக அதாவது பி. ப. 4. 00 மணிக்கு நிறைவுசெய்தால் எல்லோருக்கும் அது நன்மை தரும் விடயமாகும் எனச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். குறிப்பாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை யின் அதிபர்கள், அதிகாரிகள் இந்த விடயத்தில் கூடிய அக்கறையுடன் கவனம் செலுத்த வேண்டும். ஆசிரிய. மாணவர்களின் உளவியல் பாதிக்காதவண்ணம் அவர் களுக்குச் சம்பந்தப்பட்டோர் உதவுவார்களா?

ஆசிரிய மாணவர்.

(பாதிக்கப்படும் ஆசிரிய மாணவர்கள் ஒப்பமிட்டு இம்மடலை அனுப்பியுள்ளனர்.)

கோப்பாய், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கவீனர் பற்றிய விவரம் குடாநாட்டில் சேகரிப்பு

வலி. வடக்கு, ஏப்ரல் 20

யாழ் மாவட்டத்தில் உள்ள அங்கவீனர்கள் பற்றிய விவரங்கள் வடக்கு – கிழக்கு மாகாண சபையினால் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் கிராம அலுவலகங்களினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

கை, கால் இழந்தவர்கள், விழிப்புலன் இழந்தவர்கள், செவிப்புலன் இழந்தவர்கள், மனநோயாளர்கள் ஆகியோரின் விவரங்கள் சேகரிக்கப்பட்டுவருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு இந்த விவரங்கள் சேகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து கால்களை இழந்தவர்களுக்கு மூன்று சில்லுச் சைக்கிள் மற்றும் செவிப்புலன் இழந்தோருக்கு காது கேட்கும் இயந்திரம், விழிப்புலன் இழந்தோருக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

இந்த பொருள்கள்வடக்கு–கிழக்கு மாகாணசமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

[இ–86]

## மாணவருக்கு சீருடைத் துணிகள்

வலி. தென்மேற்கு ஏப்ரல் 20

யாழ். மாவட்டத்தில் பாடசாலை மாணவ மாணவியர்களுக்கான இலவச சீருடைத் துணிகள் வழங்கப்பட்டன.

(ஐ–185)

## தேவை

பிரபல்யமான ஸ்ருடியோவுக்கு பெண் காசாளர், உதவியாளர்கள், படப்பிடிப்பு பழகுபவர்கள் தேவை.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். வயதெல்லை 20 வயதிற்கும் 30 வயதிற்கும் உட்பட்டவர்களாக இருக்கவேண்டும் விருப்பமுடையவர்கள் சுயவிவரக்கோவையுடன் 26–04–1999 –க்கு முன் கடித மூலம் விண்ணப்பிக்கலாம்.

வ விக்கினேஸ்வரன்,
3 ஆம் கட்டை,
வாசிகசாலை ஒழுங்கை,
கல்வியங்காடு.

(64936)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத்தின் செயலாளர்
மே. பிரதீபனின்
பாசமிகு தந்தையார்


### சரவணமுத்து மேகவர்ணன்

அவர்கள் காலமாகியதை இட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஏழாலை செந்தமிழ் கலை மன்ற,
சனசமூக நிலைய
அங்கத்தவர்கள்.

(64965)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 18 – 06 – 195

உதிர்வு 21 – 03 – 1999

அமரர்

### சின்னச்சாமி பாலசுப்பிரமணியம்

(பாலு)

(பிரபல சிற்பாசாரியார்)

21–03 99 அன்று காலமான அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (20–04–99) செவ்வாய்க்கிழமை நடைபெறும் மதிய போசனத்தில் அனைவரையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்.

கற்குழி,
சாவகச்சேரி.

(64925)

## பேச்சுப்போட்டியில் பரிசு பெறுவோர்

கொழும்புத்துறை. ஏப்ரல் 20

கொழும்புத்துறை, இந்து மகா வித்தியாலயத்தின் ஆதரவில் அண்மையில் இப்பகுதிப் பாடசாலைகளுக்கு இடையில் மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட யோகர் சுவாமி குருபூசை தினப் பேச்சுப் போட்டியில் பரிசுபெறுவோர் விவரம்:

ஆரம்ப பிரிவு 1 ஆம் இடம் ப. பத்மநிருபா கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், 2 ஆம் இடம் த. பவானி கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயம், 3ஆம் இடம் அ. நர்த்திகா – சுடுண்க்குளி மகளிர் கல்லூரி.

மத்திய பிரிவு-1 ஆம் இடம் கு. கோகுலன் யாழ். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், 2 ஆம் இடம் ஜெ. திலிப்குமரன்-கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், 3 ஆம் இடம் பே. நளினி – கொழும்புக்துறை சென் அன்ரனி வித்தியாலயம்,

மேல் பிரிவு-செ. சோபிதா 1ஆம் இடம் - கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், இ. இரத்தினேஸ்வரி 2ஆம் இடம் கொழும்புத்துறை சென் அன்ரனி வித்தியாலயம், மு.வாசுகி – 3ஆம் இடம் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.

[இ-30]

## அங்குரார்ப்பணம்

மூளாய், ஏப்ரல் 20

பனிப்புலம் கிராமத்தில் புதிய கிராம அபிவிருத்திச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர் எஸ் ஜீவராசா தலைமையில் அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அங்குரார்ப்பண வைபவம் இடம் பெற்றது. (இ–99)

## சமூக சேவை இணையம்

கோப்பாயில் உள்ளபொதுப் பணி மன்றங்கள் இணைந்து சமூக சேவை இணையம் ஒன்றை உருவாக்கித் தொழிற்படவுள்ளன.

வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவிலில் சமீபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மேற்படி ஆலய பரிபாலன சபைச் செயலாளர் எஸ். செல்வரட்ணம் தெரிவித்தார்.

இந்த சமூக சேவை இணையத்தின் ஒழுங்கமைப்பாளராக கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் என். சிவகடாட்சம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (இ-ரி)

மாதாந்த பயிற்சிப் பரீட்சை (மார்ச்)
2 – 8 வரை
புதன் (21-04-99)
நடைபெறும்.

**BOND**
யாழ். நகர்.

(64961)

## தேவை

பெண்கள், சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், வெட்டுநர், தையலாளர் தேவை.

தொடர்பு:–
துரைரத்தினம்
55/1, சீனியர் லேன்,
கலட்டி,
வண்ணார்பண்ணை/
207, பலாலி வீதி,
கோண்டாவில்.

(64966)

சுழிபுரம்

## குடாக்கனை பேத்தி அம்மன் ஆலய

கட்டட நிதிக்காக வெளியிடப்பட்ட

### அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு — 748
இரண்டாம் பரிசு — 2189
மூன்றாம் பரிசு — 3404

ஆறுதல் பரிசுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 2295 | 924 | 3051 | 2804 | 2369 |
| 1479 | 1278 | 1361 | 1483 | 361 |

பரிசில்களை தகுந்த ஆதாரங்களுடன் குடாக்கனை பேத்தி அம்மன் ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்

தலைவர்
மு. உருத்திரன்

செயலாளர்
சி. வைரவன்

பரிபாலன சபையினர்.

(சி/ 7244)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
சு. ஜீவசுதன்
அவர்களின் தந்தையார்

### பெ. சுப்பிரமணியம்

அவர்கள் 1999—04—17 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தவர்களிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

3 ஆம் வருடம் 'B' பிரிவு
சமூகவியல் மாணவர்கள்
யாழ். பல்கலைக்கழகம்

(64971)

## 31 ஆம் நினைவு நாள்



திருமதி

### இராம அற்புததேவி வன்னியசிங்கம்

பிறந்த திகதி: 1938 – 06 – 04

இறந்த திகதி: 1999 – 03 – 21

"அற்புத இல்லம்" 25, உடுவில் வீதி, மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற சாராளப்பிள்ளை வன்னியசிங்கம் ( Bank of Ceylon - Manipay ) அவர்களின் அன்பு மனைவி, எமது அன்புத் தாயார் பூரண ஆத்ம சாந்தி பெறும் பொருட்டு எம் இதயபூர்வமான, மன நிறைவான அன்புப் பிரார்த்தனைகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

1999-03-24ஆம் திகதி அன்று கொழும்பு A. F. Raymond மலர்ச்சாலையிலும் பின்னர் Kanatte பொது மயானத்திலும் நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியும், உதவிகள் பல புரிந்தும் மற்றும் அனுதாபச் செய்திகளையும், கண்ணீர் அஞ்சலிகளையும், மலர் வளையங்களையும், வேறு ஆதரவுகளையும் அளித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், யாழ். பல்கலைக்கழக விலங்கியற்றுறையினர், தாவரவியற்றுறையினர், விஞ்ஞான பீட ஆசிரியர்கள், விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம், கொழும்பு Sea- Land ( Pvt ) Ltd நிறுவனத்தினர், கொழும்பு Someswaran – Jayawickrema நிறுவனத்தினர் ஆகியோருக்கும் எமது பூரண நன்றிகளையும் சமர்ப்பிக்கின்றோம்.

W.வெங்கடேஸ் ( M.S., OK., U. S. A )
சிரேஷ்ட விரிவுரையாளர், விலங்கியல் துறை,
விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

C/o 76, கல்லூரி வீதி,
பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

W.பாஸ்கரன் (A.C.A., SL,) (A.C.M.A, U.K)
உதவி நிதி முகாமையாளர்,
Sea - Land Colombo (Pvt) Ltd,
Colombo - 12.

C/o No 6,
இராமகிருஷ்ண வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-6.

(64886)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இரட்டை வேடம்

விடுதலைப் புலிகளின் கடற்புலிகளுக்கு எதிராகச் செயற்பட வசதியாக கடற்படைக்கு இஸ்ரேலிடமிருந்து நவீன தாக்குதல் கலங்களை வாங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இதே நோக்கத்திற்காக பிரிட்டனிடமிருந்து தரையிலும் நீரிலும் இயங்க வல்ல படகுகளைக் கொள்வனவு செய்யவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கடற்படையை மட்டுமன்றி இராணுவம், விமானப் படைகளையும் நவீன ஆயுத தளபாடங்கள் கொண்டு வலுப்படுத்த அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்து வருவது குறித்து அவ்வப்போது தகவல்கள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன.

அரசின் இந்த ஏற்பாடுகள், ஆயத்தங்கள் எல்லாம் வெளிநாடு ஒன்றுடன் போர் நடத்தும் நாடு செய்வதை ஒத்திருக்கின்றன.

போர் இனப்பிரச்சினையில் இருந்தே பிறந்தது. இனப்பிரச்சினை உள்நாட்டு விவகாரம். அதில் வெளியார் தலையீடோ மத்தியஸ்தமோ ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்ற நிலைப்பாட்டை அரசாங்கம் அழுங்குப் பிடியாக கௌவிக்கொண்டு நிற்கிறது.

ஆனால் போர் ஆயத்தங்களோ வெளிநாடு ஒன்றுடன் சமர் செய்வதற்கான ஏற்பாடுகளாக உள்ளன. மேலும் போர் இப்போதைக்கு முடிவுக்கு வராது; முடித்து வைக்கப் படமாட்டாது என்ற தோரணையிலேயே இத்தனை ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன.

இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதன் மூலமே சமாதானத்தை உருவாக்கலாம் என்று அரசாங்க உயர் மட்டத் தலைவர்கள் அடிக்கடி கூறி வருகிறார்கள். தீர்வுப் பொதி ஒன்றைக் கையில் வைத்துச் சூக் காட்டியவாறு காலத்லைக் கடத்துகிறார்கள்.

குட்டிப் பொதுத் தேர்தலாகக் கருதப்பட்ட ஐந்து மாகாண சபைகளுக்குமான தேர்தலின் போது சமாதானத் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும்; போர் நிறுத்தப்பட வேண்டும் என்றே வாக்காளர்கள் அரசுக்கு ஆணை தந்திருக்கிறார்கள்.

ஆனால் அரசு மக்கள் விருப்பத்திற்கு மாறாக போரைக் காலவரையின்றித் தொடர்வதிலும் அதன் பொருட்டு படைகளை நவீன வசதிகளுடன் பலப்படுத்துவதிலுமே அதிக அக்கறை காட்டுகிறது. தனது முழுக்கவனத்தையும் புலமையும் அதிலேயே செலுத்துகிறது.

இனப்பிரச்சினைக்குநியாயமான தீர்வு கண்டு நீதியுடன் கூடிய சமாதானத்தை உண்டாக்கவேண்டும் என்ற உளப்பூர்வமான விருப்பம் அரசுக்கு இருக்குமாயின், அது ஒருபோதும் இவ்வாறு செயற்படமாட்டாது என்பது நிச்சயம்,

அரசியல் நேர்மை இன்றி மக்கள் விருப்பத்துக்கு மதிப்பளியாது, போரைத் தொடர்வதற்கு முனையும் அரசின் செயல், அதன் பலவீனத்தையும், அரசியல் துணிவுஇல்லாமையையுமே பிரதிபலிக்கின்றது யாரும் எதையும் கூறட்டும்; நாம் இரட்டை வேடம் போட்டுக் கொண்டு காலத்தைப் போக்குவோம் என்ற நிலைப்பாடு முழு நாட்டுக்குமே ஆபத்தானது.

# புதிய தொழில் நுட்பத்துடன் குறைந்த செலவில்

# யாழ்ப்பாணத்தில் செயற்கைக் கால் உற்பத்தி

இலங்கையில் மிதிவெடிகளினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை யாழ்ப்பாணத்திலேயே அதிகமாக உள்ளது. அண்மையில் எடுக்கப்பட்ட மதிப்பீடு ஒன்றின்படி, கால்களை இழந்த குடிமக்களில் 30 சதவீதமானோர் யாழ்ப்பாணத்திலேயே வசிக்கின்றனர்.

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு உதவும்

கடந்த ஆண்டில் மாத்திரம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 48 குடிமக்கள் மிதிவெடிகளுக்கு இலக்கானார்கள். மிதிவெடிகளினால் கால்களைப் பறிகொடுக்கும் யாழ்ப்பாண மக்களின் துன்பங்கள் கொஞ்ச நஞ்சமன்று ஏனெனில், ஏனைய பிரதேசங்களை விட அங்கு வாழ்க்கைச் செலவு அதிகம். மருத்துவ வசதிகளும் சமூகசேவை வசதிகளும் குறைவு. விவசாயத்திற்கான காணிகள் குறைவு. வசிப்பிடங்களுக்கு அருகிலும் மோதல்கள் இடம்பெறக்கூடிய ஆபத்து உண்டு. இத்தனைக்கும் மத்தியில் நிலக்கண்ணிகளின் அபாயம்.

1987—1997 காலப்பகுதியில் ஆபத்தில் உதவும் நண்பர்கள் சங்கம் [ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்டப் பிரிவின் உதவியுடன்) யாழ்ப்பாணக் குடாநாட்டில் கால்களை இழந்த 1617 பேருக்குச் செயற்கைக் கால்களைப் பொருத்தியது. செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு [ஐ. சி. ஆர். சி ] யாழ்ப்பாணத்திலுள்ள செயற்கைக் கால் திட்ட நிலையத்தின் முயற்சிகளுக்கு உதவிகளை இவ்வாண்டு மார்ச் மாதத்திலிருந்து வழங்கத் தீர்மானித்துள்ளது. இதற்கமைய வருடத்துக்கு 100 செயற்கைக் கால்களின் உற்பத்தி, நோயாளிகளின் போக்குவரத்து, உடற்கூற்றியல் மற்றும் உடல் நலவியல் துறைகளில் 10 பேருக்குப் பல்கலைக்கழகப் பயிற்சி தொழில்நுட்ப ஊழியர்களின் செயலாற்றல் விருத்தி, உடலுறுப்பு வேலைத்தலத்தின் அபிவிருத்தி முதலிய பணிகளில் ஐ. சி. ஆர். சி. ஈடுபடவிருக்கின்றது.

### புதிய தொழில் நுட்பம்

பொலிபுறொபபிலின் தொழில்நுட்பத்தைச் செயற்கைக் கால் உற்பத்திக்குப் பயன்படுத்துவது இத்திட்டத்தின் ஒரு சிறப்பம்சமாகும். இலங்கை போன்ற நாட்டிற்கு இதுவே மிகப் பொருத்தமான தொழில் நுட்பமாகும். செல்வந்த நாடுகளில் செயற்கைக் கால்களை ஆக்குவதற்குப் பயன்படுத்தப்படும் முறை செலவு மிக்கதாகும். நம்நாட்டுச் சாதாரண மக்களினால் அச்செலவைத் தாங்கிக்கொள்ள முடியாது. ஆகவே, ஏற்கனவே தயாரிக்கப்பட்ட கால்பாகங்களை வெளிநாட்டிலிருந்து தருவிப்பதற்குப் பதிலாக உள்நாட்டிலேயே பொலிபுறொப்பிலின் போன்ற வெப்ப வார்ப்பு பிளாஸ்டிக்கைப் பயன்படுத்திச் செயற்கைக் கால் பாகங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்தொழில்நுட்பம் செலவைப் பெருமளவில் குறைப்பதால் கால் இழந்தவர்களில் அநேகமானோர் செயற்கைக் கால்களைப் பொருத்திக்கொள்ளும் வாய்ப்பினைப் பெறுகின்றனர்.

ஐ. சி. ஆர். சி. இத்தகைய கால் பாகங்களை ஆப்கானிஸ்தான், அங்கோலா, கம்போடியா போன்ற நாடுகளில் செயற்பட்டுவரும் செயற்கைக்கால் பொருத்தும் அமைப்புக்களுக்கும் வழங்குகின்றது.

### மிதிவெடிகளால் பாதிக்கப்படுவோருக்கு

மிதிவெடிகள் அதிகமாகப் புதைத்து வைக்கப்பட்டுள்ளதெனக் கருதப்படும் நாடுகளில் 3 புதிய செயற்கை அவயவம் பொருத்தும் நிலையங்களை ஐ. சி ஆர். சி. 1998 ஆம் ஆண்டில் நிறுவியது.

தற்சமயம் ஆப்கானிஸ்தான், அங்கோலா, அஸர்பைஜான், கம்போடியா, கொங்கோ, ஜோர்ஜியா, ஈராக், கென்யா, ருவாண்டா, தஜிகிஸ்தான், உகண்டா ஆகிய நாடுகளில் 22 நிலையங்களை ஐ. சி. ஆர். சி. நடத்துகின்றது

மிதிவெடிகளினால் பாதிக்கப்படுவோருக்கு உடலியல் ரீதியாக புனர்வாழ்வு அளிக்கும் பணியை ஐ சி ஆர். சி. 1979 இல் ஆரம்பித்தது. இதுவரை, கால்களை இழந்த 80,000 பேருக்கென 130,000 கால்களையும், 175,000 சோடி ஊன்றுகோல்களையும்9,000-க்கு மேற்பட்ட சக்கர நாற்காலிகளையும் அது உருவாக்கி வழங்கியுள்ளது. 1997 இல் மாத்திரம் 11,500 செயற்கைக் கால்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இவற்றில் 6,500 செயற்கைக் கால்கள் மிதிவெடிகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே வழங்கப்பட்டன.

இலங்கையில் இந்த வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளவர் செயற்கை அவயவ நிபுணர் ஜெரால்ட் பிற்ஸ்பட்ரிக் ஆவார். இவர் யாழ்ப்பாணத்திலுள்ள ஐ. சி. ஆர். சி குழுவினருடன் சேர்ந்து பணியாற்றுவார்.

பிற்ஸ்பட்ரிக் அமெரிக்காவிலுள்ள ஒகையோ மாகாணத்தில் பல்கலைக்கழக கல்வியை முடித்துக் கொண்ட பின்னர் 3 வருடகாலம் செயற்கை அவயவம் பொருத்தும் துறையில் விசேட பயிற்சி பெற்றவர்.

அங்கோலா, குயிற்றோவிலுள்ள செயற்கை அவயவம் பொருத்தும் மருத்துவ நிலையத்தில் 2 வருடங்கள் பணியாற்றியுள்ளார். அங்கு மாதம் ஒன்றிற்குச் சராசரியாக 50 செயற்கைக் கால்கள் செய்யப்படுகின்றன.

காலை இழந்த ஒருவர் செயற்கைக் காலைப் பெறும் போது அடையும் மகிழ்ச்சி பற்றி பிற்ஸ்பட்ரிக் இவ்வாறு கூறுகின்றார்;

"...செயற்கைக் காலைப் பெறுபவர் தாம் மீண்டும் முழுநிறைவாகும் ஓர் அனுபவத்தைப் பெறுகின்றார். அவர் மீண்டும் தன்னில் நம்பிக்கை வைக்கின்றார். இனி, அவர் ஊன்றுகோல்களை உதறித்தள்ளிவிட முடியும். கால் இழந்த ஒருவர் எமது வேலைத்தளத்திற்கு வந்து கால் பொருத்தப்பட்ட பின்னர் புன்சிரிப்புடன் நடந்து செல்வதைக் காணும் போது நான் அடையும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை'' — என்று.

★

[நன்றி: ஐ சி. ஆ. சி. செய்தி மடல்]

# கிராமப் பகுதி மாணவர் திறமையை ஆசிரியரே வெளிக்கொணர வேண்டும்

## கட்டடத் திறப்பு விழாவில் அரச அதிபர்

தென்மராட்சி, ஏப்ரல் 20

கிராமங்களில் உள்ளவர்களை புத்திஜீவிகளாக மாற்றும் பொறுப்பு அங்குள்ள பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்களையே சாரும். ஒவ்வொரு மாணவனின் திறமையையும் இளமையிலேயே வெளிக் கொணரவேண்டும். மாணவர்களின் ஆற்றல்கள் வெளி உலகத்திற்குத் தெரிய வரும்போது நகரப்புறப் பாடசாலைகளுக்குச் செல்லும் ஆர்வம் மாணவர்கள் மத்தியில் குறைந்து விடும்.

விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தினால் அமைக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதிக் கட்டடம், பாடசாலை அபிவிருத்திச் சபையினரால் அமைக்கப்பட்ட கலை அரங்கக் கட்டடம் ஆகியவற்றைத் திறந்து வைத்த யாழ். மாவட்ட அரச அதிபர் க. சண்முகநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் கு. கதிர்காமசேகரர் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது—

### கல்வி வளம்

ஆசிரியர்கள் தத்தமது பகுதியில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி மாணவர்களை புத்திஜீவிகளாக மாற்றுவதால் கிராமப் புறப் பாடசாலைகளுக்கு கல்வி வளங்கள் அதிகமாகக் கிடைக்க வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் நகரப்புறப் பாடசாலைகளில் ஏற்படும் இட நெருக்கடிகள் குறையலாம்.

கிராமப் புறப் பாடசாலைகளில் போதிய கல்வி வளங்கள் இல்லாததால் தமது கல்வித்திறமையை வெளிக்கொணர வாய்ப்பு இல்லாததால் ஆசிரியர்கள் கல்வி வளங்கள் கூடிய பாடசாலைகளை நாடிப் போகிறார்கள். இந்த நிலைமை மாற வேண்டும்.

தனது சொந்தக் கிராமப் பாடசாலையில் கல்வி போதிக்க விரும்பாமல் ஆசிரியர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளுக்குச்செல்வதால் கிராமப்புறப் பாடசாலைகளுக்கு வேறு இடங்களிலிருந்து ஆசிரியர்களை நியமிக்கவேண்டியுள்ளது இதனால் மாணவர்களுக்குரிய கல்வி வளங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்பட முடியாமல் வீணாகுகின்றன.

ஆனால் இதற்கு விதிவிலக்காக இந்தப் பாடசாலை நகரத்திலிருந்து பல மைல் தூரத்துக்கு அப்பால் மிகவும் பின்தங்கிய கிராமத்தில் உள்ள போதிலும் கடந்த நான்கு வருடங்களாக இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களின் அயராத சேவையினால் மாணவர்களின் திறமைகள் வெளி உலகத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று தானாகவே முன்வந்து வகுப்பறைத் தொகுதிக் கட்டடத்தை அமைத்துள்ளதும்—

இப்பகுதி மக்கள் கலை அரங்கத்தினையும் ஏனைய புனரமைப்பு வேலைகளையும் செய்து கொடுத்துள்ளமையும் ஒரு சான்றாக அமைகிறது— என்றார்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை உரையாற்றுகையில் பாடசாலை நிர்வாகத்துக்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள் நலன் விரும்பிகள் தம்மாலான ஒத்தாசைகளைவழங்கினால் நிச்சயம் அந்தப் பாடசாலையைக் குறுகிய காலத்தில் உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர முடியும். பாடசாலையின் அதிபர் தனது பதவியைப் பொறுப்பேற்ற காலம் முதல் தனக்கு கிடைத்த உச்சப் பயன்பாட்டை உரிய முறையில் செயற்படுத்தியதால் மிகக் குறுகிய காலத்தில் இப் பாடசாலையை நகர்ப்புறப் பாடசாலை மாணவர்களின் தரத்திற்கு கொண்டு வர முடிந்தது என்றார்.

கல்வித் திணைக்களப் பொறியியலாளர் கு. சிவபாலன் தமதுரையில் தென்மராட்சி கிழக்குப் பகுதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட இப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஒருமித்த செயற்பாட்டினால் அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரை இக் கிராமத்திற்கு வரவழைத்துள்ளது —என்றார்.

தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. கயிலைநாதன், டாக்டர் வி. ஆறுமுகம் உட்பட பலர் உரையாற்றினர் வித்தியாலய பரிசில் நாள் பரிசில்களை திருமதி சுபத்திரா தேவி சண்முகநாதன் வழங்கினார்.

(இ-117)

## நாளை

சித்திரை 8

புதன்கிழமை

திதி: ஷஷ்டி

முன்இரவு 8.47 வரை

நட்சத்திரம்: திருவாதிரை

முன்னிரவு 9 57 வரை

ஷஷ்டி விரதம்

சுபநேரம்: 4.31-6.01

ராகுகாலம்: 12.01-1.31

(பஞ்சாங்கக் கணிப்புகள் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

முழுமையான நிதானத்துடன் இருக்கும் ஒருவனை எவனாலும் முட்டாளாக்க முடியாது

— தாட்:. பார்டுடே

## கத்திக் குத்து

வடமராட்சியைச் சேர்ந்த ஒருவர் லண்டனில் கத்திக் குத்துக்கு உள்ளாகி படுகாயமடைந்தார்.

வதிரியைச் சேர்ந்த தங்க வடிவேல் சுபாஸ் (வயது27) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

கடந்த ஆறாம திகதி லண்டனில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் காயமடைந்தவர், அவருடன் ஒரே கம்பனியில் வேலை செய்து வரும் கறுப்பர் ஒருவரினாலேயே கத்தியால் குத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுவில் இராணுவம் நிலை கொண்டிருப்பது சமாதான பேச்சுக்கான வாய்ப்பைதடுத்துள்ளது

## மன்னார் ஆயர் கூறுகிறார்

மடுவில் படையினர் நிலை கொண்டுள்ளமை தொடர்பாக கத்தோலிக்க வட்டாரங்களில் அதிருப்தி நிலவுவதாக யாழ் வந்த மன்னார் ஆயர் அதிவந். ராயப்பு யோசெப் தெரிவித்துள்ளார் மடு நிலைமை குறித்து அவர் வழங்கிய செவ்வி கீழே பிரசுரமாகி உள்ளது. செவ்வி கண்டவர் மாவை குகன்.

'நாட்டின் சமாதானத்துக்கான மையமாக மதிக்கப்பட்டு வந்த மடுப்பிரதேசத்தில் சமாதானப் பேச்சுக்கான சூழல் உருவாக்கப்பட்டிருந்தது; தற்சமயம் இராணுவம் அந்தப்பிரதேசத்தைக் கைப்பற்றியதால் அந்த விடயம் வெகுதூரத்துக்குப் போய் விட்டது.'

மன்னார் ஆயர் அதிவந். ராயப்பு யோசெப் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கு குறுகிய நாள தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு வந்திருந்த மன்னார் ஆயர் உதயன் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேறகண்ட கருத்தைத் தெரிவித்தார்.

மடுப்புனித பிரதேசப் பகுதியைப்படையினர் கைப்பற்றிய பின்னர் அங்கு நிலவும் நிலைமைகள் தொடர்பாக அவர் விளக்கம் அளித்தார்.

அவர் அளித்த பேட்டி வருமாறு:-

### ஆலயத்தின் புனிதத்தன்மை பாதிப்பு

கேள்வி:- மடுவைப்படையினர் கைப்பற்றிய பின்னர் அங்குள்ள நிலைமை பற்றி கூறுவீர்களா?

பதில்:- மடுப்புனிதத்தலம் 400 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. பிரதேசத்தின் எல்லைகளைக் குறிக்க நான்கு மூலைகளிலும் சிலுவை நடப்பட்டுள்ளது.

ஆலயம் அமைந்துள்ள பகுதியில் இருந்து 200 அல்லது 300 யார் தூரத்தில் படையினர் காவலரண்களை அமைத்துள்ளனர். இந்தக் காவலரண்கள் ஆலயத்தின் நான்கு பக்கங்களிலும் உள்ளன.

அங்கு பணிபுரியும் படையினர் மரங்களை வெட்டுகிறார்கள்; மதுபானங்களை அங்கு வைத்துக் குடிக்கிறார்கள்; ரி.வி பார்க்கிறார்கள்; களியாட்டங்கள் நடக்கின்றன. இவையெல்லாம் ஆலயத்தின் புனிதத்தை மாசுபடுத்துகின்றன.

இவை தொடர்பாக வன்னிப்படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு முறையிட்டுள்ளேன். அவற்றை நிறுத்துவதாக அவர் உறுதி அளித்துள்ளார்.

மடுவில் அமைந்துள்ள முகாம்களில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் தங்கியுள்ளனர். அவர்கள் தமது இருப்பிடங்களை, உடைமைகளை இழந்து உயிரை மட்டும் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மாதாவிடம் அடைக்கலம் கோரி வந்துள்ளனர். மனம் புண்பட்ட நிலையில் ஆறுதல் தேடி வந்துள்ள அந்த மக்களிடம் வீணான அநாவசியமான கேள்விகளைக் கேட்டு அவர்களின் மனங்களைப் புண்படுத்தும் செயல்களில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

தம்மைப் பாதுகாக்க படையினர் வந்துள்ளனர் என்று மனநிம்மதி அடைய வேண்டிய மக்கள் பதிலுக்கு படையினர் வந்தமை தமது பாரமாக அமைந்துள்ளது எனக் கருதுகின்றனர்.

மடுவுக்கும் பண்டிவிரிச்சானுக்கும் இடையில் அமைந்துள்ள மாவீரர் மயானத்துக்கு ஒன்றும் செய்யக் கூடாது என்று படையினரிடம் கேட்டுள்ளேன். இறந்தவர்களுக்கு அளிக்க வேண்டிய மதிப்பைக் கொடுக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளேன்.

மடுத்தேவாலயத்தில் 400 ஏக்கர் பிரதேசத்தில் இருந்து படையினர் வெளியேறவேண்டும். ஆலயப் பிரதேசத்தில் ஆயுதங்களுடன் எவரும் நடமாடக் கூடாது; படையினர் சீருடைகளுடன் நடமாடக் கூடாது. இதுவே எமது கோரிக்கையாகும்.

சிவில் நிர்வாகத்தை அரச அதிபர் தலைமையிலான அதிகாரிகள் மேற்கொள்ளலாம். படையினர் அதைச் செய்ய வேண்டியதில்லை.

படையினர் அங்கு நிலை கொண்டிருக்கும்போது தெற்கில் இருந்து மக்கள் வந்தால் அவர்கள் ஆபத்துக்களில் சிக்கக் கூடும்.

ஆயுதங்களுடன் படையினர் உள்ளதால் எந்தச் சந்தர்பத்திலும் மோதல் வெடிக்கும் அபாயநிலை உள்ளது.

### பூசைகள், உற்சவம் நடைபெறுகின்றன

கேள்வி:- தற்போதுள்ள சூழ்நிலையில் மடுவில் உற்சவங்கள் நடைபெறுகின்றனவா...?

பதில்:- தற்சமயம் பூசைகள் மிக அமைதியாக நடைபெறுகின்றன. மாதாந்த உற்சவமும் இடம்பெறுகின்றது.

படையினர் தொர்ந்து நிலைகொண்டிருந்தால், ஆலயத்தில் வருடாவருடம் ஆடி இரண்டாம் திகதியும், ஆவணி 15 ஆம் திகதியும் நடத்தப்படும் வருடாந்த உற்சவம் நிறுத்தப்படும்.

இந்த உற்சவங்களில் பங்குபற்றுவதற்குக் கூடும் ஆயிரக்கணக்கான பக்தர்களின் நன்மை கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கேள்வி:- மடுவைப் படையினர் கைப்பற்றியதால் ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்து...?

பதில்:- வடக்கு—கிழக்கில் ஏன் இலங்கையிலேயே தமிழ் மக்களும், சிங்கள மக்களும் ஒன்றுகூடி நண்பர்களாகக் கூடிக்குலாவி கலந்துரையாடுவது மடுத்திருப்பதியில் தான்.

அத்துடன் மடுத்திருப்பதி நாட்டின் சமாதானத்தின் மையமும் ஆகும். தெற்குத் தலைவர்கள், மதப்பெரியார்கள் மடுவுக்கு வந்து விடுதலைப் புலிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதனால் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வாய்ப்பு இருந்தது.

சமாதானப் பேச்சுக்கள் இரகசியமாக இடம்பெறக் கூடிய இடமாகவும் மடு விளங்குகின்றது.

படையினர் இன்று மடுவைக் கைப்பற்றியதால் அதற்கான வாய்ப்பு வெகு தூரத்துக்குச் சென்று விட்டது.

கடந்த காலங்களில் இந்திய அமைதிப்படையினரோ, விடுதலைப் புலிகளோ மடுவுக்கு வந்தனராயினும் அங்கு அவர்கள் நிலைகொள்ளவில்லை.

ஆனால் ஸ்ரீலங்காப் படைகள் மட்டும் நிலைகொண்டு ஆலயத்தின் புனிதத்துக்கு மாசு கற்பிக்கின்றன.

### பிரார்த்தனை

கேள்வி: இந்த நிலையில் தாங்கள் என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?

பதில்: ஆலயப் புனிதத்தைக் காக்கக்கோரி மன்னார்-வவுனியா மறைமாவட்டத்தில் உள்ள 300 தேவாலயங்களிலும் தினமும் மக்கள் பிரார்த்தனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

படையினரை விலக்குமாறு ஜனாதிபதியைக் கோரியுள்ளோம். இந்தக் கோரிக்கையை வலியுறுத்துமாறு கத்தோலிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரியுள்ளோம்.

மடுவில் இருந்து படைகளை விலக்க இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கொழும்பில் உள்ள வத்திக்கான் நாட்டுத் தூதுவரிடம் கோரியுள்ளோம். அவர் மூலம் பரிசுத்த பாப்பரசருக்கு இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

[இ-3]

# செய்திக் கொத்து

### பயிற்சி நெறி

யாழ். திருமறைக் கலாமன்றததினால் நாட்டுக் கூத்துப் பயிற்சி மற்றும் இயக்கியப் பயிற்சி ஆகிய இரு பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிக்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி எதிர்வரும் 28 ஆம் திகதியாகும்.

(க-ரி)

### வானியலும் சோதிடமும் கற்கைநெறி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவினரால் வானியலும் சோதிடமும் என்ற கற்கை நெறி இலவசமாகக் கற்பிக்கப்படவுள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சையில் கணிதப் பாடத்தில் சித்தி அடைந்தவர் இந்தப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 29 ஆம் திகதியாகும். [க-ரி]

### தொலைபேசி வசதி

திருநெல்வேலி, ஏப்ரல் 20

மருதனார் மடத்திலுள்ள வலிகாமம் கல்வி வலய அலுவலகதுக்கு அண்மையில் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. [க-135]

### சில்லறைக்குப் பதிலாக ரொபி

தென்மராட்சி, ஏப்ரல் 20

சில்லறைக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக சில சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் மிகுதிப் பணத்துக்குப் பதிலாக ரொபி வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

[இ-117]

### திருப்பலி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

சுன்னாகம். புனித அந்தோனியார் ஆலய பங்கைச் சேர்ந்த அருட்தந்தை அருளப்பு றொபின்சனின் முதற் திருப்பலி எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும்.

[க-15]

### போட்டிகள்

திருமதி கமலாம்பாள் சண்முகரத்தின சர்மா அம்மையார் நினைவாக நினைவுச் சபையார் நடத்தும் கந்தபுராண கவியமுது மனனப் போட்டியும். கட்டுரைப்போட்டியும் வரும் மே மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகள் பறாளை முருகன் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் சங்காபிஷேக தினத்தன்று வழங்கப்படும்.

[க-28]

### நிதி ஒதுக்கீடு

ஆரம்பக் கல்வி அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் யாழ். சென் றோக் றோமன் கத்தோலிக்க பாடசாலையைத் திருத்தி, அமைப்பதற்கு யாழ். கல்வி வலயம் சுமார் 90 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துளளது.

[க-51]

### விநியோகம்

கொழும்புத்துறை கிழக்கு ஜே 162 கிராம சேவகர் பிரிவில் மீளக்குடியேறியவர்களில் வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூரைத் தகடுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

[க—30]

### வைத்தியசாலை புனரமைப்பு

கடந்தகால வன்செயல்களினால் சேதமடைந்த தொல்புரம் பாணாவெட்டி அரசினர் வைத்தியசாலை புனரமைக்கப்பட்டு மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. (க - 28)

### தமிழ்-சுருக்கெழுத்து தட்டெழுத்து வகுப்பு

சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க் கிழமை முதல் முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் தமிழ் - சுருக்கெழுத்து, தட்டெழுத்து வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. (க-29)

### அதிபர் நியமனம்

யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்துக்கு புதிய அதிபராக க. சண்முகலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் அரியாலை பூம்புகார் அ.த.க. பாடசாலையில் அதிபராகப் பணிபுரிந்தவராவார்.

(க-51)

## ஆலயப் புனரமைப்பு வேலைகள் துரிதம்

வலிகாமம் தெற்கு ஏப்ரல் 20

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயம் துரிதமாக புனரமைக்கப்பட்டு வருகின்றது.

தேவாலயத்தின் கட்டடத்தில் ஏற்பட்ட சிதைவுகள் சீர்செய்யப்பட்டு வெள்ளையடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேவாலய வளவினுள் அமைக்கப்பட்டிருந்த காவலரண்கள் இராணுவத்தினரால் கைவிடப்பட்டு தேவாலயம் மக்கள் பாவனைக்கு அண்மையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

தேவாலயத்தைச் சேர்ந்த மக்களால் தேவாலய வளவு துப்பரவு செய்யப்பட்டு கட்டட புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(இ-152)

## வலைப்பந்தாட்ட, கரபந்தாட்ட போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை புதன் கிழமை காலை 8 மணிமுதல் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின்விவரம்வருமாறு:-

★ 19 வயது— உடுவில் மகளிர் எதிர் சுண்டுக்குழி மகளிர்

★ 15 வயது— வடஇந்து மகளிர் எதிர் கொடிகாமம் திருநாவுக்கரசு.

★ 15 வயது— டிறிபேர்க் எதிர் உடுவில் மகளிர்.

★ 17 வயது— டிறிபேர்க் எதிர் வேம்படி.

★ 19 வயது— டிறிபேர்க் எதிர் வடஇந்து மகளிர்.

### கரபந்தாட்டம்

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ். கலவி வலய அலுவலகத்தில் நாளை புதன்கிழமை காலை முதல் நடக்கும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விபரம் வருமாறு:-

★ 17 வயது— நயினாதீவு கணேசா எதிர் ஹாட்லி.

★ 17 வயது—மல்லாகம்ம.வி எதிர் இமையாணன் அ.த.க. பாடசாவை.

★ 19 வயது— நெடுந்தீவு ம.வி. எதிர் ஹாட்லி.

(இந்த ஆட்டங்கள் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.)

★ 19 வயது— நாவற்குழி ம.வி. எதிர் யாழ். சென்ரல்.

★ 19 வயது— நெடுந்தீவு ம.வி. எதிர் ஹாட்லி.

இந்த ஆட்டங்கள் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும்.

(இ-3)

## ஆஞ்சநேயர் ஆலய அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் திருப்பணி வேலைகளுக்கான அங்குரார்ப்பண விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 7.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

மேற்படி வைபவத்தில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கலந்து கொண்டு திருப்பணி வேலைகளை அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தர்மலிங்கம் விவேகானந்தன்

(கூட்டுறவுப் பரிசோதகர், வவுனியா)

தர்மலிங்கம் விவேகானந்தன் 18-4-99 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 5 மணிக்கு திருகோணமலையில் காலமானார்.

அன்னார் திருமதி விவேகானந்தன் யோகேஸ்வரியின் (கூட்டுறவுப் பரிசோதகர், திருகோணமலை) அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-4-99) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் (170, கஸ்டம்ஸ் றோட், திருகோணமலையில்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை கூட்டுறவுத் திணைக்கள ஊழியர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
**திருமதி தில்லைநாதன் செல்லம்மா**
(மாமி)

இல. 7, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(64979)

## பெரியநாச்சி சுப்பிரமணியம் (மணியம்)

நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த பெரியநாச்சி சுப்பிரமணியம் 17-4-99 சனிக்கிழமை இறைபதமெய்தினார்.

இவர் காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற நாகலிங்கம் - சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும், தங்கராசாவின் (இந்தியா) அன்புச் சகோதரனும் ஜீவகாந்தன், ஜீவமலர், ஜீவசுதன் (3 ஆம் வருடம் கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்), ஜீவறோசாந்தி, ஜீவவாசுகி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவலிங்கம், குணேஸ்வரி, ராம்சுந்தர் ஆகியோரின் அன்பு மாமனாரும், அமிர்தலிங்கம், வினோதினி, சந்திரசேகர், பிறேமரூபன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற துரையப்பாவின் அன்பு மருமகனும் ரேதுகா, றேமதா, மதுஷன், பதுஷன், நர்மதா, காந்தரூபன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெகனின் பெரிய தந்தையாரும், ரதன், ஜெகா, வதனி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21-4-99 புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ். கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
**சு. ஜீவசுதன் [சுதன்]**
(மகன்)

கே கே எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,

(65011)

## சரவணமுத்து மேகவர்ணன்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் ஊரங்குனையை வசிப்பிடமாகவும் கொண்ட ச. மேகவர்ணன் 18-04-99 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து [C.I.D.] செல்வநாயகி [கனடா] தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், அமரர் சின்னையா தங்கம்மா அவர்களின் மருமகனும், பரமேஸ்வரி [சுகாதார சேவை உத்தியோகத்தர், தெல்லிப்பழை] அவர்களின் அன்புக் கணவரும் உஷாந்தினி, ஜெகதீபன் [யா / யூனியன் கல்லூரி], பிரதீபன் [மானிப்பாய் மெமோறியல் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நீலவர்ணன், பஞ்சவர்ணன், வர்ணசோதி [ஜேர்மனி], வர்ணமலர் [கனடா], வர்ணராணி [லண்டன்] ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கமலநாதன் சுப்பிரமணியம் [ஜேர்மனி] சின்னத்துரை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
சூராவத்தை,
சுன்னாகம்.

தகவல்:
**மே. பிரதீபன்**
[மகன்]

(64964)

## இரத்தினசபாபதி ஜெயரட்ணராஜா

[ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், HABIB BANK]

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த இரத்தினசபாபதி ஜெயரட்ணராஜா 18-4-99 தெஹிவளையில் காலமானார்.

இவர் இரத்தினசபாபதி [ஜே பி.- மலாயன் பென்சனர்] இராசமலர் தம்பதிகளின் அன்பு மகனும் வசந்தரத்தினத்தின் அன்புக் கணவரும் ஜெனனியின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை [21-4-99] புதன்கிழமை மாலை 4 மணியளவில் தெஹிவளையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சு. சிவஞானசுந்தரம்**
[சகலன்]
'சிவபதி'
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

திருமதி வ. ஜெயரட்ணராஜா
இல. 27, அல்பேட் பிளேஸ்,
தெஹிவளை.
தொ. பேசி. இல. 731032.

(64928)

## சமய சந்நிதிகளில்

நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர் வரும் 29 ஆம் திகதி வியாழக் கிழமை ரதோற்சவமும் மறு நாள் வெள்ளிக்கிழமை சித்திரைப் பூரணையன்று தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

சங்கத்தானை இத்தியடி வீரகத்திப்பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர் வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக் கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ஐ-7)

★ ★ ★

மாதகல் நுணசை கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பன்னிரண்டு நாள்கள் நடைபெறும் உற்சவநிகழ்வுகளில் எதிர்வரும் 29 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-15-90)

★ ★ ★

இணுவில் மேற்கு செகராசசேகரப் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் இன்று, செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 29 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (க-15-30)

### 2 எம். பிக்கள்...

[முதலாம் பக்கத் தொடர்]

ராஜாவும் சுயேச்சைக் குழுவிலிருந்து விலகிவிட்டதால் அவர்களை எம். பிக்களாக நியமிக்க முடியாது என்று டக்ளஸ் தேவானந்தா தமது மனுவில் தெரிவித்திருந்தார்.

அந்த மூவரும், யாழ். தேர்தல் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகரான யாழ். அரச அதிபரும், தேர்தல் ஆணையாளரும் மனுக்களில் பிரதி மனுதாரர்களாகக் குறிப்பிடப் பட்டிருந்தனர்.

மனு நேற்று நீதியரசர்கள் அமீர் ஸ்மாயில், ஷிரானி திலகரட்னா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இடைக்காலத் தடை உத்தரவு விடுப்பதற்கு மறுத்த நீதியரசர்கள், மனுவுக்கு ஒரு மாத காலத்துக்குள் பதில் மனுத் தாக்கல் செய்யுமாறு எதிர் மனுதாரர்களுக்கு நோட்டீஸ் உத்தரவு பிறப்பிக்கப் பணித்தனர். (உ-6-21)

### சுதந்திரக்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

களும் முறையே நேற்றும் இன்றும் நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவது உட்பட எதிர்காலத் தேர்தல்கள் மற்றும் பல முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### பூர்வாங்க...

(முதலாம் பக்கத் தொடர்)

இதேவேளை —

மேற்படி விசாரணைக் குழு முன்னிலையில் சாட்சியமளிப்பது தொடர்பான விளக்கங்களைச் சங்கச் செயலாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு வடபகுதியில் கைது செய்யப் [illegible] சங்கம் அறிவித்துள்ளது. (ஐ-6-5-3)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பரமேஸ்வரி பேராயிரம்பிள்ளை

(ஆசிரியை)

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பரமேஸ்வரி பேராயிரம்பிள்ளை 14-4-99 [வருடப் பிறப்பன்று] காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா பேராயிரம் பிள்ளையின் அன்பு மனைவியும் பே. இளமுருகன் [ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, கோண்டாவில் இ. ம. வி] அன்புத் தாயாரும் இணுவில் கார்த்திகேசு - இராமலிங்கம், உருத்திரம் ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பெருமாள் பிள்ளை தம்பையா, ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும், இணுவிலைச் சேர்ந்த தம்பித்துரை மங்கையர்க்கரசியின் அன்புச் சகோதரியும் இ. புனிதவதியம்மாள், த. மங்களேஸ்வரர், ம. உருத்திர குமாரி, தே. சகலகலாவாணி (ஆசிரியை, இணுவில் இ. க.), அ. மனோகரி, ப. விஜயலக்சுமி, த. யோகேஸ்வரன் ஆகியோரின் சிறியதாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15-4-99 வியாழக் கிழமை அன்று இணுவில் காரைக்கால் மயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பே இளமுருகன்**
[மகன்]

மஞ்சத்தடி,
இணுவில்.

[64983]

## திருமதி நடேஸ்வரி நரசிங்கம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் தொல்புரம் கிழக்கைப் புகுந்த இடமாகவும் கொண்ட திருமதி நடேஸ்வரி நரசிங்கம் அவர்கள் 19-4-99 திங்கட் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் நரசிங்கம் (சமாதான நீதிவான், நீதிமன்ற ஏல விற்பனையாளர், விலைமதிப்பாளர், தொல்புரம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -இராசமுத்து தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் நிமலன் (கணக்காளர், ஆஸ்திரேலியா), கோகுலன் (முன்னாள் கடற்படை அதிகாரி, நியூசிலாந்து), நளாயினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சுகந்தி (ஆஸ்திரேலியா), கோமதி (நியூசிலாந்து), நந்தகுமாரன் (மின்சார ஒப்பந்தக்காரர்) ஆகியோரின் அன்பு மாமியும் திரிசூலன், கரிணி, நாராயணி, இஷான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மகேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்றவர்களான புஸ்பகாவல்லி, மனோரஞ்சிதவல்லி, Dr. இராஜாப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரஸ்வதி (லண்டன்). காலஞ்சென்ற மகேஸ்வரி, Dr பரமேஸ்வரி (ஆஸ்திரேலியா), ஜெகதீஸ்வரி (தொல்புரம்), சின்னத்தம்பி (லண்டன்), தேவராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-4-99) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க. நந்தகுமாரன்**
(மருமகன்)

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

(65004)

## திருமதி குழந்தைவேலு சர்வலோகலெட்சுமி

புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி குழந்தைவேலு சர்வலோகலெட்சுமி 19-04-99 அன்று பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் குழந்தைவேலு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தர்மசூரியலிங்கம், வீரகுலசிங்கம், விசாலாட்சி மற்றும் சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாதேவி (ஆசிரியை — வேலணை பிரதேச சபை), சேனாதிராசா (நோர்வே), செல்வராணி (ஜேர்மன்), பரமேஸ்வரன் (கனடா), தில்லைநாதன் (பிரான்ஸ்), சிவகௌரி (பிரான்ஸ்), சிவானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கராசா (தபாலதிபர் — நெடுந்தீவு), கௌரிநாயகி (நோர்வே), தவராசா (ஜேர்மன்), கோசலாதேவி (கனடா), வரதலட்சுமி (பிரான்ஸ்), சத்தியகுமார் (பிரான்ஸ்), பகீரதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தவரூபன், நந்தரூபன், கீதலதா, கேமலதா, சசிக்குமார், பிரதீப், நிநஷாந்தி, தனேஷ், ஜஷ்மினா, அர்ச்சினி, நிர்ச்சினி, தினேஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
**நா. தங்கராசா**
(மருமகன்)
தபாலதிபர்
**த. கமலாதேவி**
(மகள்)

159/3, நல்லை லக்ஷ்மி அவனியூ,
கோவில் வீதி, நல்லூர்.

(சி/7249)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேவை

கடை அனுபவமுள்ள
பில் கிளார்க் / கணக்காளர்
தேவை.
(வடமராட்சியில் வசிப்பவர் மட்டும்)

**ஜமுனா ஸ்ரோர்ஸ்**
நெல்லியடி. (64991)



# விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள
பஜாஜ் ஸ்கூட்டர் SUPER-FE - ELECTRONIC
விற்பனைக்குண்டு.
தொடர்பு:
**ஜமுனா ஸ்ரோர்ஸ்**
நெல்லியடி. (64992)



# சீலைன்ஸ் கொம்பிளைக்ஸ்
## SEALINES COMPLEX

21 - 04 - 99

வதிரி வீதி, உடுப்பிட்டியில்.
(64984)



# விற்பனைக்கு உண்டு

1118 ரக போட்டோஸ்ரற் மெசின், லெம னேட்டிங் மெஷின், ரோனர், போட்டோஸ்ரற் பேப்பர், கோழிகளுக்கு சொண்டு வெட்டும் மெசின் (Electronic) என்பன விற்பனைக்கு உண்டு.

**குறிஞ்சி பார்மஸி**
எட்னா விநியோகத்தர்
558, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(64994)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 06 — 05 — 1923

மறைவு 22 — 03 — 1999

திருமதி
## பெல்லா இரட்ணபூசணம் சின்னத்துரை
(இளைப்பாறிய ஆசிரியை)

22-03-99 இல் காலமான திருமதி பெல்லா இரட்ணபூசணம் சின்னத்துரை அவர்களது மரணத் தின் போது தந்தி, தபால்கள் மூலமும் நேரிலும் அனு தாபம் தெரிவித்து ஆறுதல் கூறிய உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிலகாலமாக நோயுற்றிருந்த அன்னாருக்கு சிர மங்கள் பாராது வைத்திய உதவிகள் புரிந்த டாக்டர் ஜோ. ஆனந்தராஜா லோறன்ஸ் அவர்களுக்கும் எமது விசேட நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். அன் னாருக்காக ஜெபித்து பிரார்த்தனை செய்த அனைத் துக் குருக்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் நினைவு ஆராதனை நாளைய தினம் (21-04-99) புதன்கிழமை காலை 7.30 மணிக்கு நல் லூர் புனித ஜே ஸ் தேவாலயத்தில் நடைபெறும். இதில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம இளைப் பாற்றிக்காக ஜெபிக்குமாறு அன்பர்கள் அனைவரை யும் அன்போடு அழைக்கின்றோம். தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

— குடும்பத்தினர்

49, இராசவீதி,
நல்லூர். (65003)

# மேலும் 7 பேருக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

வடக்கு—கிழக்கு மாகாண சபையால் கடந்த ஆண்டு ஜூன் 27ஆம் திகதி நடத்தப் பட்ட எழுதுநர், சிறாப்பர், கணக்குப்பதியுநர், களஞ்சியக் காப்பாளர் பதவிகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகளின் படி மேலும் 7 பேருக்கு நிய மனம் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே 69 பேருக்கு நிய மனம் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. இவர்கள் அனை வருக்கும் எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதி முதல் நிய மனம் வழங்கப்படவுள்ளது.

மேற்படி 76 பேரும் திரு கோணமலைக்குச் செல்வதற் கான பயண ஏற்பாடுகளை செய்வதற்கு வசதியாக தாங் கள் நியமனம் பெற்றதை உறுதிப்படுத்தும் கடிதத்தை யாழ் செயலகத்தில் பெற்றுக் கொண்டு தமது பிரிவு பிர தேச செயலாளருடாக பிர யாணத்திற்கான விண்ணப் பங்களை உடன் சமர்ப்பிக்கு மாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

புதிதாக நியமனம் பெற்ற 7 பேரின் விவரம் வருமாறு:

எஸ். பத்மாவதி (சிறுப் பிட்டி மேற்கு, நீர்வேலி), அருள்ராஜ் யோசப் சுரேந் திரன் (உசன், மிருசுவில்), எம். கிருஷ்ணகுமார் (தையிட்டி, காங்கேசன்துறை) ரி. முருகதாசன் (பெரியரசடி ஒழுங்கை, சாவகச்சேரி), பி. எஸ். பாஸ்கரன் (சோனெழு, கோப்பாய் மத்தி), வி. தனேஸ்குமார் (அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி), எஸ். சத்தியநாராயணன் (பன் னாலை, தெல்லிப்பழை).

## தயிர்...

(முதலாம் பக்கத் தொடர்)

பஸ்ஸில் தயிர்ச் சட்டிகளை சோதனை செய்த பொலீ ஸார் அவற்றில் ஒரு தயிர்ச் சட்டியில் இருந்து 2 கிலோ கிராம் நிறையுள்ள இந்த அதிசக்திவாய்ந்த குண்டை மீட்டனர்.

தயிர்ச் சட்டிகளைப் பஸ்ஸில் எடுத்துச்சென்ற மட்டக் களப்பைச் சேர்ந்த நடராசா சரவணன் [வயது 14], பீதாம் பரம் இராசன் [வயது 29] ஆகிய இருவரும் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

மூன்றாம் ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்டதன் 5 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வெடிக்கவைப்பதற்காக இந்தக் குண்டு மட்டக்களப்பில் இருந்து அம்பாறைக்குக் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

## சடலங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

இராணுவம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு அனு மதி அளித்துள்ளது என்று வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

நேற்று வவுனியாவில் நடை பெற்ற இராணுவ உயர்மட் டக் கூட்டம் ஒன்றில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

உயிலங்குளம் 9 ஆம் கட் டைப் பாதையூடான போக்கு வரத்து தடை செய்யப்பட் டதை அடுத்து இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கான உணவுப் பொருள் விநியோக மும் மக்கள் போக்குவரத்தும் இரண்டாவது நாளாக நேற் றும் ஸ்தம்பிதமடைந்தன.

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிக்கு பிரயாணம் செய் வதற்காக வவுனியா பஸ் நிலையத்துக்கு வந்த பலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை காணமுடிந்தது.

(ஐ-6-164)

## உயிலங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிந்ததே.

வவுனியா — மன்னார் வீதி யில் புலிகள் நடத்திய இத் தாக்குதலை அடுத்து வன்னிப் பகுதிக்கு உணவுப் பொருள் களை எடுத்துச் செல்லும் வாகன அணி மற்றும் அம் புலன்ஸ்கள் 9 ஆம் கட்டை பாதை ஊடாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக் குச் செல்வதைப் படையினர் தடைசெய்திருப்பது தெரிந் ததே.

இந்தப் பகுதியில் இனி மேல் தாக்குதல் நடத்தப் படமாட்டாது என்று புலிகள் உறுதிமொழி அளித்தால் மட் டுமே வாகன அணி செல்ல அனுமதிக்கப்படும் என்று வவுனியா இராணுவ அதி காரி தெரிவித்திருந்தார்.

இந்த சூழ்நிலையில் அதே இடத்தில் விசேட அதிரடிப் படையினர் புலிகள் மீது நடத்தியுள்ள இந்தக் தாக்கு தல் வன்னிப் பகுதிக்கு உணவு வாகன அணி செல்வதில் மேலும் முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தி உள்ளதாக வவு னியா செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. [ஐ-6-164]


எமது ஓடியோ
CD வெளியீடுகள்!

A.R. ரகுமானின்
இசையில்

ஊஞ்சல்
முதல் முத்தம்
காதலே வா
அதுதாண்டா
இதுதாண்டா

**சுப்ப ஸோ வீடியோ,**
யாழ்ப்பாணம்.
(சி/7250)


உ
சிவமயம்
கச்சாய் தெற்கு
# ஸ்ரீ அருள்மிகு பாதாள வைரவர் ஆலயம்
## வருடாந்த
## அலங்கார உற்சவம்

ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் 21-04-99 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 10 நாள்கள் விசேட பூசைகள், ஆராதனைகள் நடை பெறும். இறுதி 10 ஆம் நாள் 108 சங்காபிஷேகமும் வைரவப் பெருமான் உள் வீதி, வெளி வீதி வலம்வரு தலும் இடம்பெறும். அன்பர்கள் அடியார்கள் அனைவ ரையும் அழைக்கின்றோம்.

விளம்பர அன்பளிப்பு:-
**அருள் நாயகி புத்தகசாலை**
பஸ் நிலையம், கொடிகாமம்.
(சி/7248)


# DCS
## College of Computer Technology
JAFFNA
## 1999 / 2000 SCHOLARSHIP EXAMINATION

The results of the above examination held on 21st March 1999 have been posted to the candidates. The closing date for registration has been extended to Sunday 2nd May 1999.

- DIRECTOR (Ad)

D C S
P. O. Box 144,
Jaffna.

D C S
124/2, Palaly Road.
Thirunelvely.

(64977)



# JAFFNA Y.M.C.A.

அங்கத்தவருக்கான உள்ளரங்க
## விளையாட்டுப் போட்டிகள்

1. Badminton 2. Carrom 3. Chess

விண்ணப்பப் படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். போட்டிகளுக்கான விண் ணப்ப முடிவு திகதி 29 - 04 - 99.

செயலாளர்,
Y.M.C.A.
யாழ்ப்பாணம்.

109, கண்டி வீதி,
சுண்டிக்குழி,
யாழ்ப்பாணம்.
(சி/7247)


# கண்ணீர் அஞ்சலி

செல்வி ஆறுமுகம் புஸ்பலதாவின்
அன்புத் தாயார்
## ஆறுமுகம் சின்னாட்சி
அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரசறிவியல் மாணவர்கள்,
"B" பிரிவு.
(65009)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-04-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org